# புனிதஜோதி



அமரர்

## மகேசன் புனிதவதி

அவர்களின் சிவபதப் பேறு குறித்து வெளியிடப் பெற்றது

20-04-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



பருத்தித்துறை அல்வாயைப் பிறப்பிடமாகவும் இல.16,D8 உருத்திரபுரத்தை
ரந்தர முகவரியாகவும் இல: 392 ஆனந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட


அமரர் திருமதி மகேசன் புனிதவதி
அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# புனித ஜோதி

**20-04-2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



பருத்தித்துறை அல்வாயைப் பிறப்பிடமாகவும் இல.16,D8 உருத்திரபுரத்தை நிரந்தர முகவரியாகவும் இல: 392 ஆனந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி மகேசன் புனிதவதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# புனித ஜோதி

**20-04-2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் குடும்ப ஒளியாய்
வழியாய் இருந்து
எமையெல்லாம் அவனியில்
உயர வைத்திட்ட அன்னையே
விதியெனும் நியதியில் மதியே
உங்கள் ஒளியிழந்தோம்
நீங்கள் இல்லாது உங்கள்
நினைவுகளைச் சுமந்து கலங்கி
வாடுகின்றோம்!
இவ்வேளை அன்னை புனிதவதியெனும்
அன்புத் தெய்வம் நினைவாக
அல்வாய் அரசடி வினாயகரின்
பாதார விந்தங்களுக்கு இம்மலரினை
சமர்ப்பணம் ஆக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

*பிள்ளைகள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவண பலகுஹ சரணம் சரணம்
சிலைமலியுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவறு மொருபரை சரணம் சரணம்
உமைசிவ யம்பிகை சரணம் சரணம்

## தேவாரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே அனையாய் யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக் குண்டா
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
அமரர்கள் பிறைநுதல் சகலமுங் கற்றோர்
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணாயகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றி போற்றி

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தாராமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாராயணனொரு நான்முகனங்கி
யிரவியு மிந்திரனும்
தேரார் வீதியுற் றேவர் குழாங்க
டிசையனைத் தும்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பாதிமதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாண னாதிரு மருகோனே
கால னெனையணு னாமலுன திரு
காலில் விழிபட அருள்வாயே
ஆதி அயனெடு தேவர் சுரருல
காளும் வகையுரு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவு
சுவாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மகிழ
944-01-03



மனம் நெகிழ
2013-03-21

அமரர்

# திருமதி மகேசன் புனிதவதி

அவர்களின்

## திதி நிர்ணயவெண்பா

நல்லாள் நடைபாதை முன் நந்தன வருடம் நகர்ந்து செல்ல
இல்லாள் கண் பூர்வபட்ச நவமி நலமே கூடி நிற்க
புண்ணியவதியாம் புனிதவதி பூவுலகம் விட்டு
அல்வையூர் அரசடி விநாயகரடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி மகேசன் புனிதவதி அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

**அமரரின் இளமைக்காலப் பதிவுகள்**

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கிடும் இலங்கைத் தீவின் வடபால் அமையப்பெற்ற யாழ் மண்ணில் மருதநிலமும், நெய்தல் நிலமும் ஒரு சேர அமைந்த வடமராட்சி நன்நிலத்தில் கல்வியும் செல்வமும் குன்றிட வட அல்வாய் தன்னில் சைவமரபில் இளையதம்பி கண்ணகை தம்பதியினர் தம் இல்லறத்தின் நல்லறமாக கந்தசாமி, தங்கத்துரை, அருளானந்தம், தர்மநாதன் என்னும் நான்கு ஆண் மக்களையும் புனிதவதி என்னும் புத்திரியையும் பெற்றெடுத்தனர். இவர்களில் அமரர் புனிதவதி அவர்கள் காரக்கால் புனிதவதியாரை ஒத்த தெய்வப் பெண்ணாக, ஏக புத்திரியாக 1944 ஆம் ஆண்டு தைமாதம் 03ஆம் திகதி இவ்வுலகில் வந்துதித்தார்.

1952ஆம் ஆண்டு அமரர் அவர்கள் தனது எட்டாவது வயதில் கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கு கிராமம் குடியேற்றப்படும் போது தனது பெற்றோர் சகோதரர்களுடன் கிளிநொச்சி மண்ணில் காலடி பதித்தார். இவர்களுக்கு தந்தை வழியில் முருகேசுவாத்தியார் என அழைக்கப்படும் பெரிய தகப்பனாரின் நல்வழிகாட்டலும், சிறிய தகப்பன் கோவிந்தசாமி அவர்களின் நல்லாதரவும், தாய்வழியில் வேலப்பா என அழைக்கப்படும் வேலுப்பிள்ளை இளையாசை என அழைக்கப்படும் கந்தையா ஆகிய தாய்மாமனார்களின் உறுதுணையும் கிளிநொச்சியில் வாழ வழிவகுத்தது.

அமரர் புனிதவதி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை தேவரையாமி இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் பயின்று வந்தார். கல்விக்கு உற்ற துணையாக இவரது அருள் அண்ணா இருந்து வந்தர். திருக்கன்னியர் மடத்தில் தையல் கலையைப் பயின்று சிறந்த தையல் நாயகியாகத் திகழ்ந்தார்.

இளமைக் காலத்தில் அமரரின் தந்தையார் தனது ஏக புத்திரியின் அதீத பாசத்ததால் தனது தம்பி கோவிந்தசாமி (அப்பையா) அவர்களின் காரில் பருத்தித்துறையில் நடைபெறும் விழாக்கள், சடங்குகளுக்கு அனுப்பி வைப்பார். இவ்வாறாக தனது இளமைக் காலத்தை இனிமையாக களித்து வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரரின் இல்லறக்கால இனிய பதிவுகள்**

குடும்பத்தில் ஏக புத்திரியாக மிகவும் செல்லமாகவும், அன்பாகவும் வளர்க்கப்பட்டார். அதனால் எல்லோர் கவனத்தாலும் சிறுபராயம் முதல் அழகாக உடையணிந்து செல்வார்.

வட அல்வையின் உறவினரான வேலுப்பிள்ளை சிவகாமி தம்பதியினரின் மூன்றாவது மகாமகேசன். அதிபர் அவர்களின் இல்லற வாழ்வை இனிதாக ஆரம்பித்தார். திருமண நிகழ்வு மேடையமைந்த முத்துப் பந்தல், முத்து மணவறையில் வண்ண ஒளிவிளக்குகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவரின் திருமண நிகழ்வு போன்று இன்று வரை எவருக்கும் நடைபெறவில்லை என எம் உறவினர் குறிப்பிடுவர். ஒரு பெண் அணியக் கூடிய ஆபரணங்கள் அனைத்தையும் அணிந்த மணப்பெண்ணாக தனது புகுந்தவீடு சென்ற பெருமை மறக்க முடியாதது.

இப்படிக்கபட்ட பெருமைகளுடன் இல்லறத்தின் நல்லறமாய் மனையறம் பொலிய நன்மக்களாக யசோதை, உமாசங்கர், ராதை பத்மச்ங்கர், வனிதை, கௌரிசங்கர், உதயசங்கர் எனும் ஏழு செல்வங்களைப் பெற்றெடுத்தார்.

தனது மூத்தமகள் யசோதையை பிள்ளை என அழைத்து பொறுமைக்கும், அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாக வாழ வழிகாட்டியதுடன் தனது துணைவர் போன்று மருமகள் அமையவேண்டும் என எண்ணியதிற்கு அமைய நற்குணம் கொண்ட அருமையான மருமகனாக பரந்தனைச் சேர்ந்த முத்துக்குமார் அவர்களின் மூத்தமகன் சந்திரகுமாரை சுவிஸ் நாட்டில் திருமணம் செய்து வைத்து சுகங்கள் பல கண்டார்.

மூத்தமகள் உமாசங்கரை "என்ர ஐயா" "என்ர சிவபெருமான்" என செல்லமாக அழைத்து நற்குண, நற்செயல் வீரனாக வளர்த்து தனது கணவர் வழியில் நல்ல அதிபராக உருவாக்கினார். தன் முதல் செல்வத்தை பிறர்வழியில் கொடுக்க அஞ்சி தன் வழியில் தனது மூத்த அண்ணன் கந்தசாமி அவர்களின் கடைசி மகள் கீதாமணியை பல எதிர்பார்ப்புக்களுடன் திருமணம் செய்து வைத்தார்.

அடுத்த மகள் ராதையும், அடுத்த மகன் பத்மசங்கரையும் இரட்டைபிள்ளைகள் போன்ற பல விதம் விதமான உடைகள் அணிவித்து அழகு பார்ப்பார். தன்பிள்ளைகள் உயர்தொழில் புரிய வேண்டும் என எண்ணி ஆசிரியர், டாக்டர் என ஆசை வார்த்தை கூறி வளர்த்து வந்தார். அவ்வழியில் மகன் பத்மசங்கர் பல்கலைக் கூடம் சென்று பட்டங்கள் பல பெற மிகுந்த ஆதரவாக இருந்து வழிகாட்டினார். திருமண பந்தத்தில் மகள் ராதை அமரரின் ஒன்றுவிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரன் செல்லையா அவர்களின் கடைசி மகன் சிவகுமாரை மணம் புரிந்தார்.

அமரர் தான் அரியாலையில் வாழ்ந்த சிலகாலந் தொடர்புகளோடு தனது மகன் பத்மசங்கரை திரு. திருமதி நடராசா செல்வராணி தம்பதியகளின் ஏக புத்திரி ரதீனியை திருமணம் செய்து வைத்தார்.

கடைசி மகள் வனிதை ரோகினி நட்சத்திரத்தில் பிறக்கவே ரோகிணி என செல்லமாக அழைத்து வந்தார். கல்வியிலும். நடனத்திலும் சிறந்து விளங்க ஊக்கமளித்தார். இந்துக் கல்லூரி கலைநிகழ்வுகளில் நடனம் ஆடும் போதெல்லாம் மகிழந்து ஆர்ப்பரிப்பார். திருமணப் பருவத்தில் தனது இரண்டாவது அண்ணா தங்கத்துரை அவர்களின் மூத்தமகன் கேசவனுக்கு திருமலையில் திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தார்.

அடுத்த மகன் கௌரிசங்கரின் வயதில இருகைகளிலும் சுடுநீர் படவே துடிதுடித்து கதறி அழுது கண்ணீருடன் மூன்று வாரங்களாக தனியார் மருத்தவ மனையில் தன்காலத்தை இரவு பகலாக கண்விழித்து பார்த்து வந்தார். பல எதிர்பார்ப்போடு தன் பிள்ளைகளின் உயர்கல்வி வரை வளர்க்க ஆவல்ப்பட்டார். தனது மூன்றாவது அண்ணா அருளானந்தம் அவர்களின் மகள் கவிதாவிற்குக் கொடுத்தார்.

தனது ஏழாவது கடக்குட்டியாக உதயசங்கரைப் பெற்றெடுத்து தனது இறுதிக்காலம் வரை உணவளித்து, ஆதரவளித்து அன்புகாட்டி வந்தார். கடக்குட்டியின் அதீத பாசத்தால் வெளியே செல்லும் போதும் படுக்கைக்கு போகும் போதும் சிவசிவ எனக்கூறி விபூதி பூசுவார். பல கவனங்கள் கூறி வழியனுப்புவார். இறுதிக் காலங்களில் தன் குட்டிக்கு மூத்தமகள் போன்று மருமகள் எடுக்க வேண்டும் என ஆர்வத்தோடு ஆவலாக இருந்தார்.

இவ்வாறு தான் பெற்ற பிள்ளைகளை சிறந்த முறையில் கற்பித்து. உயர்நிலைப்படுத்தி அளவு கடந்த பாசமும். அன்பும் மேலோங்க தனது பேரப்பிள்ளைகளுடன் மழலை மொழிபேசி தனது உற்றாரும் சுற்றமும் போற்ற இனிதே வாழ்ந்து வந்தார்.

**அமரர் அவர்களின் சுவிற்சலாந்துப் பயணம்**

மூத்த மகள் யசோதை குடும்பத்தின் எதிர்பார்ப்பதற்கும் அன்பிற்கும் ஏற்ற 2008 ஆம் ஆண்டு சுவிற்சலாந்திற்குப் பயணமானார். விமான நிலையத்தில் மருமகன். மகள். பேரப்பிள்ளைகள். பெறாமக்கள். உடன்பிறவா சகோரர்கள். மைத்துனர்கள் என பலரின் வரவேற்பு பூரிக்க வைத்தது அனைவரும் கட்டித்தழுவி ஆரவாரித்தனர். சிரித்த முகத்தோடு அனைவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்தார். பேரப்பிள்ளைகள் லக்சன் வாணிகாவின் ஆரவாரிப்பும், மருமகன் சந்திராவின் அங்கலாப்பும், மகள் யசோவின் குதூகலமும் சொல்லில் அடங்காது.

வீட்டில் மருமகள் சந்திராவின் ஏகப்பட்ட உபசரிப்பும், வரவேற்பும் மாமி மாமி. எனக் கூறி அன்பும் வேடிக்கையும் கொண்ட வார்த்தைகளால் சிறைப்படுத்தினர். பேரப்பிள்ளைகளின் மழலை மொழியும், வருடலும், அம்மம்மா எனம் டொச் கலந்த இனிய வார்த்தையும் சிந்தையை உலுக்கியது. மகளின் வகை வகையான உணவுப் பண்டங்களும் பரிமாறலும் அன்னையை மனம் நெகிழ வைத்ததது.

சுவிற்சலாந்து உறவுகள் வீடு தேடி வந்து அன்பைப் பொழிவதும், வீடு தேடிச் சென்று ஆசை காட்டுவதும் அமரரின் வருகையால் உறவினர்களின் பல்வகை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளலும் எம்மூர் வட அல்வாயை நினைவு படுத்தியது.

மகள் குடும்பத்துடன் தினமும் பல்வேறு இடங்களைச் சுற்றிப்பார்ப்பதும், புகைப்படம், வீடியோ எடுப்பதும் அமரரின் பசுமையான காலங்களாக அமைந்தது. சுவிஸின் இயற்கையுடன் இணைந்த அமரரின் வண்ணப்படங்களை மருமகன் சந்திராவின் கைவண்ணத்தில் உருவான "சுவிற்லாந்தில் ஓர் சுற்றுலா - 2008" எனும் அல்பம் வெளிப்படுத்துகின்றது.

சுவிஸ் நாட்டில் உள்ள மனோன்மணி அம்மன் ஆலயத்தில் அமரரின் தேவாரப் பாடல்கள் ஒலித்தது. இவ்வாறு சுவிஸ் நாட்டின் பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு பிரிந்தும் பிரியாத நிலையில் மூன்ற மாதங்களின் பின் தாய்நாடு புறப்பட்டார். இங்கு வந்தும் சுவிஸ் நினைப்பாக பல காலங்கள் வாழ்ந்தார்.

**அமரர் அவர்களின் சமயப்பணி**

அமரர் தான் வாழ்ந்த உருத்திரபுரம் கிழக்கு கிராமத்தின் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளாக தேவார திருப்பதிகங்கள் படித்தும், விசேட நைமித்திய காமிக கிரியைகள் செய்தும் சமயப்பணியாற்றினார். பண்ணோடு தேவாரம் இசைப்பது இவரின் இலட்சியமாக இருந்தது. எத்தெய்வத்திற்கு எந்த நிறத்'தைக் கொண்ட பூக்கள் எனக் கூறி அழகான சுடர்க் கொடியாள் ஆண்டாள் போன்று தெய்வீகப் பணி இவரின் பிற்பட்ட காலங்களில் முதன்மை பெற்றது.

காரைக்கால் புனிதவதியாரை ஒத்த தெய்வ அம்சம் கொண்டு தனது வீட்டின் சுவாமி அறையை அலங்கரித்து தூப தீபம் காட்டி இறையருள் பெறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் தன் துணைவருடன்



அமரர் தன் குடும்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழியில் தன் பிள்ளைகளையும் நல்வழிப்படுத்திய புதுமைப் பெண்ணாக இவ்வுலகில் வாழ்ந்தார்.

சிறிய துன்பமாயினும், இன்பமாயினும் இறைவனுக்கு நேர்த்தி வைப்பார். நேர்த்தியாக ஆலயங்களுக்கு வேண்டிய அவசியமான பூசைக்கான நிரந்தரப் பொருட்களை கொடுப்பார். அடிக்கடி பொங்கல், அன்னதானம் என இறைவனை குளிர்ச்சிப்படுத்துவார். "சிவாய நம" என்பது தாரக மந்திரமாக எந்நேரமும் ஓதுவார். வைத்தியத்தின் மருந்தாக விபூதி போடுவார். தூரப் பயணங்களுக்கு விபூதியே காவல் என கொண்டு செல்வார். வயது முதிர்ந்தாலும் பிடிக்காத விரதமே இல்லை. தெய்வத்தோடு வாழ்ந்து தெய்வ அம்சம் பெற்றார்.

எம்மூர் அல்வாய் அரசடிப் பிள்ளையார் வேவிலந்தை முத்துமாரி அம்மன், கிளிநொச்சி கந்தசாமி கோயில், நகரத்து பிள்ளையார் கோயில், ஜெயந்தி நகர் மீனாட்சி அம்மன் கோயில் A-9 மீனாட்சி அம்மன் கோயில், புதுமுறிப்பு கற்பகப் பிள்ளையார் கோயில், கனகபுரம் கருணாகரப் பிள்ளையார் கோயில், ஆனந்தபுரம் நாகதம்பிரான் கோயில், துர்க்கை அம்மன் கோயில், மாணிக்கப் பிள்ளையார் கோயில், பொலிகண்டிப் பிள்ளையார் கோயில், வவுனியா கருமாரி அம்மன் கோயில் போன்ற கோயில்களுக்கு அடிக்கடி செல்வதும், தேவார பதிகங்கள் பாடுவதும் வழக்கமாக்கிக் கொண்டார்.

சாயி பாபா சுவாமிகளின் புனிதமான வழிகாட்டல் தன் பிள்ளைகளுக்கு பாபாவின் அருளாட்சியைக் காண்பித்தவர். இவ்வாறு சமயநெறி நின்று வாழ்ந்து இறைவனடி சேர்ந்த புண்ணியவதி.

**அமரர் அவர்களின் சமூகப்பணிகள்**

தனது துணைவர் மரணத்திற்குப் பின் அவரது ஓய்வூதியத்தில் தானும், தனது கடக்குட்டி மகனும் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். ஓய்வூதியப் பணத்தின் ஒரு பகுதியை சேமித்து தனது துணைவர் அமரர் வேலுப்பிள்ளை மகேசன் (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் நினைவாக உருத்திரபுரம் கிழக்கில் மகேசன் முன்பள்ளி பாடசாலைக்கு பல உதவிகள் புரிந்து வந்தார். முன்பள்ளிக்கான பாடசாலைச் சீருடையை அறிமுகப்படுத்தி, அதனை வைத்து பிள்ளைகளுக்கு வழங்கினார். அத்துடன் முன்பள்ளிக்கான பெயர்ப்பலகை மற்றும் உபகரணங்களையும் தனது பிள்ளைகளின் உதவிகளைப் பெற்று வழங்கி வந்தார். வருடாந்த விளையாட்டு நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிப்பதுடன் பரிசுப் பொருட்களையும் வழங்கி வந்தார்.

தனது துணைவர் முதல் அதிபராக கடமை புரிந்த கிளி / புதுமுறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 2012ம் ஆண்டு மார்கழி மாதம் 05ம் திகதி பிள்ளைகளினதும் தனதும் பங்களிப்புடன் தனது துணைவரின் பிறந்த நாளில் மகேசன் சிறுவர் நூலகம் ஒன்றை அமைத்து நூல்களையும் நூலக தளபாடங்களையும் வழங்கினார். அந்நிகழ்வு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.க. முருகவேல் அவர்களும், கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் திரைநீக்கம் செய்து திறந்து வைத்தனர்.

இப்பாடசாலையில் துணைவரின் மறைவுக்குப் பின் நடைபெறும் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராக அழைப்பது வழக்கமாக இருந்தது. அந்நிகழ்வுகளில் பரிசுப் பொருட்களுடன் சென்று கலந்து கொண்டு மகிழ்வார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம், ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கும் அமரர் மகேசன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயங்களை வழங்கி மாணவர்களை ஊக்கமளித்து வந்தார்.

இவ்வாறு தன் கணவர் நினைவாக அவர் கடமை புரிந்த பாடசாலைகள், பிள்ளைகள் கடமை புரியும் பாடசாலை பேரப்பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகள் என நிகழ்வுகளில் கலந்து மாணவர்களை ஊக்கமளித்து வந்தார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 60வது வைர விழா நிகழ்வு சிறக்க கல்லூரியின் முதல் அதிபர் கா. நாகலிங்கம் அவர்களுக்கு தனது கணவர் அமரர் மகேசன் ஞாபகார்த்த நினைவுக் கேடயம் ஒன்றையும் வழங்கி கௌரவித்தார். அத்துடன் வைர விழாவின் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் கல்லூரியின் பெறுபேறு முதன்மை மாணவர்களுக்கான 35 பதக்கங்களையும் அமரர் மகேசன் ஞாபகார்த்தமாக வழங்கி கௌரவித்தார். இந்திகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் மனங்களை வென்றவராகவும் கலந்து சிறப்பித்தார்.

**அன்னாரின் இறுதிக்காலம்**

ஆனந்தபுரத்தில் தன் கடைக்குட்டி மகனுடன் வாழ்ந்து வந்தார். இறுதிக்காலத்தில் மகனின் ஆதரவோடு நாகதம்பிரான் கோயில், துர்க்கையம்மன் கோயில், நாகபூசணி அம்மன் கோயில் போன்ற ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்து தேவாரப் பதிகங்கள் பாடி வந்தார்.

மரணிக்கும் முதல் நாள் தனது நாளாந்த சகல செயல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குறைவின்றிச் செய்ததுடன் தனது குட்டிக்கு இரவும். மறுநாள் உணவிற்காக தோசைக்கான ஆயத்தமும் செய்து. தொலைக்காட்சியில் திருமதி செல்வம். தங்கம், செல்லமே எனும் தொடர் நாடகங்களை ஆவலுடன் பார்த்து விட்டு உறங்கினார்.

மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து தன் கடைக்குட்டி மகனை எழுப்பி சுடுநீர் வைத்துத் தருமாறு கூறி அதனை அருந்தினார். அவரின் இயல்பு நிலையில் மாற்றத்தை உணர்ந்து அயல் வீட்டவர் உதவியை நாடினார். பின் தன் மூத்த மகனையும். மகள் ராதையும் தொலைபேசி மூலமாக அழைக்குமாறு கூறினார்.

மகனைக் கண்டதும் என்ர ஐயா வந்திட்டியளே என எழுந்து அவருடனும் மகளுடனும் வைத்தியசாலை சென்றார்.

அங்கு "விதி வலிது" எனும் கூற்றுப்படி அவர் இவ்வுல்க வாழ்க்கையை நிறைவு செய்து இறைவனோடு சேர்ந்தார். "தோன்றிற் புகழோடு தோன்றுக" எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க புகழோடு தோன்றி வாழந்து நந்தன வருஷ பங்குனி பூர்வபட்சத்து நவமி திதியில் இறையடி நிழலில் இரண்டறக் கலந்தார். அமரர் புனிதவதி எனும் அம்மையார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் யசோதை, உமாசங்கர், ராதை, பத்மசங்கர்,வனிதை, கௌரிசங்கர், உதயசங்கர் பிரலாபம்

ஏழ்பேர்க்கும் ஏணிப்படியாயிருந்து ஏற்றம் புரிய வைத்த
அன்னையே உன் ஆவி அடங்கியதேனோ
அன்பு காட்டி அன்னமூட்டிய நினைவெலாம் அலையாய் ஆர்ப்பரிக்க
அம்மா என்ற நா ஐயகோ ஐயகோ என லாச்சோ
தந்தையையிழந்து நாம் தனித்திருக்கையில் தாங்கியிருந்தாய்
தாயே எமை தவிர்க்கவிட்டு ஓடி ஒழிந்ததெங்கே
கூடியிருந்த காலமெலாம் குலவிளக்கே ஒளிதந்தாய்
நலமுடனே நாமிருக்க நெடும்பயணம் சென்றதெங்கே
பெயருக்கேற்ற பெண்ணென பெயர்பெற்றிருந்ததனால்
பெருமையுடன் நாமிருக்க தாங்கள் மறைந்ததெங்கே
கைக்கிழயவன் கடைசிவரை காத்துப் பாத்திருக்க
கைவிட்டோடி கதறியழ வைத்ததேனோ
பிறப்பென்ற ஒன்று மீண்டும் உண்டேல் அன்னையே
எம்குடும்பத்திலொருவராய் அவதரிப்பாயோ

## மருமகன் சந்திரகுமார் (சுவிற்சிலாந்து) பிரலாபம்

வானலையில் வந்த செய்தி தலையில்
இடியாய் விழுந்ததம்மா
தொலைபேசியில் காதிற்கு வந்த செய்தி
பொய்யாகாதோ தாயே
வானேறி வந்திங்க நின்றநாள் நினைவிருக்க
பாடை ஏறும் பாழாய் போன நாள் வந்ததேனோ
புனிதவதியென்ற இறை நாமங்கொண்ட தாயே
பிணமென்ற நாமம் பூண்டதேனோ
மாமியெனும் உறவில் வந்த தெய்வமே மண்ணை
விட்டு மறைந்திடுவீரென நானறியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோதையின் கரம் பிடித்த நாள் முதற்கொண்டு
கண்டிலேன் ஒரு துன்பமும்
குடும்பத்தில் ஒருவனாய் தானிருக்க வழிகாட்டி
தாங்கள் மட்டும் தனித்தோடியதெங்கே
நீண்ட தூரத்தில் நானிருந்ததால் மாமியே உங்கள்
இறுதிநெடும் பயணத்தில் பங்கு கொள்ள முடியாமல்
பாவியானேன். மண்ணில் உள்ளவரை மாமியே என்றும்
மறவேன் மறவேன் மறவேனே.

## மருமக்கள் கீதாமணி, சிவகுமார், ரதிஜினி, கேசவன், கவிதா பிரலாபம்

புனிதவதியெனும் பூங்கொடியில் பூர்த்த மலர்களுடன்
இல்வாழ்க்கை எனும் இனிய பந்தத்தில் நாமும் ஒரு
மலரானோம்.

நறுமணம் வீசிடும் நல்லாள் குடும்பத்தில் நாமும்
இணைந்து நலம் பல பெற்று நாமிருக்க
காலானாய்

மாமி என்ற உறவில் அன்னையின் அன்பு
காட்டி அரவணைத்த தெய்வமே எம்முயர்விற்கு
உரமானாய்

அம்மம்மா அப்பம்மா என எம் குழந்தைகள்
அழைத்து ஆசை அடங்க முன்னரே
அமரரானாய்

பாசம் காட்டி தெய்வஒளி காட்டி வளர்த்து விட்டு
மனிதத்தின் மாயை இனம் காட்டி
தவிர்க்கவிட்டதேனோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்தள் வைக்கப்படும்" எனும் பொய்யா மொழிக்கு
இலக்கணமாய்

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிராத்திக்கும் மருமகன்மார் மருமகள்மார்.

ஓம் சாந்தி

## பேரப்பிள்ளைகள் : லக்சன், வாணிகா, சங்கீத், சஞ்சிகா, சாருகா, சாத்விகா, லக்சிகா, சானுகா, கேஜன், அபிநயன்,அக்சயன், அருண், வர்சன்

## பிரலாபம்

அணைத்தெடுத்து ஆசை மொழி பேசும் அம்மம்மா அப்பம்மா
எங்கேயம்மா
ஆத்திசூடி கொன்றை வேந்தன் என்ற அமுதமொழி
சொல்லும் அன்புப் பேர்த்தி எங்கேயம்மா
அப்பா அம்மா அடிக்க வந்தால் அணைத்தெடுக்கும்
குலவிளக்கு எங்கேயம்மா
அயர மறுத்த கண்களுக்கு ஆரிவரோ சொல்லும்
அப்பம்மா எங்கே அப்பா
வீம்புத்தனத்தையும் விடாப்பிடியையும் கண்டு மகிழும்
அம்மம்மா எங்கே அம்மா
நெற்றியில் நீறணிந்து சுற்றிவரும் புனிதவதியாம்
அப்பம்மா எங்கேயம்மா
கண்ணிலிருந்து மறைந்து கண்ணீரை மீதம் விட்டதாயே
கனவிலொரு தடவை வந்து கதை சொல்வாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் : தங்கத்துரை, தர்மநாதன் பிரலாபம்

எம் குடும்பத்திற்கு ஒளியூட்ட வந்தவொரு பெண் சோதரியே
நான்கு சோதரர் நாம் மகிழுந்திருக்க
புனிதவதியெனும் இறைநாமத்துடன் இணைந்திருந்தாய்

எமைப் பெற்றதாயும் தந்தையும் பேருவகை அடைய
பெரியவளாய் வளர்ந்து பேரும் புகழும் ஈட்டினாய்
பெற்றவரும் மற்றவரும் போற்றி புகழ நடந்து சென்றாய்
கன்னி நீ கரை சேரும் காலமறிந்து உன்கை பிடிக்க
நாட்பார்த்து நட்சத்திரம் பார்த்து நாண்பூட்டவென
நல்லதோர் மைத்துனர் மகேசன் உபாத்தியார் உறுதியானார்

உன்னெழில் கண்டு உத்தமியே உன்வாழ்வு சிறக்க
உரிய பணியை நால்வர் நாம் செய்தோமம்மா
இல்லறம் எனும் நல்லறம் இனிதே நடந்தேறியது

ஐவரில் இருவர் எஞ்சியிருக்க தங்கையே
தங்களுடன் இருவர் சென்றதெங்கே
அருமைக்கொரு பெண் பெருமை பேசினோம்.

## உற்றார் உறவினர் பிரலாபம்

பிறந்த ஊருக்கும் பின் வாழ்ந்த ஊருக்கும்
பேரும் புகழும் சேர்த்து பெருமை கொண்ட தாயே
மகேசன் கைபிடித்த புனிதவதியே

அல்வையூர் அறிவகம் என்றும் போற்றிடும் பொன்னான
உம்பணியை எம்நாளும் பெற்றிடும் உம் அறிவொளியை
அணைத்திடாது காத்திடும்

இறைநாமம் கொண்டு இறைபணி செய்த
புனிதவதியே உம்பெருமைகளைப் பிள்ளைகள்
காத்திட உதவி நிற்போம் எந்நாளும்
மரணத்தின் போது நடந்த மதிப்பீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்திரளாலும் கண்ணீர் அஞ்சலியாலும்
அஞ்சலி உரைகளாலும் கணிப்பீடானது

படுத்திருந்த உம்மை பார்க்க வந்தோம்
நின்றுபார்க்கக் கூடி இடமில்லாது திகைத்தோம்
ஊரும் தேசமும் கூடி உன்பக்கமாகவிருந்தது.

பேரும் புகழும் பெற்று பெருவிருட்சமாய்
வாழ்ந்து பெற்ற பிள்ளையும் எம்மையும்
தவிர்க்கவிட்டு தனிவழி சென்ற தெங்கே

## தேற்றம்

பிறப்பினது பிம்பம் இறப்பென அறி
இவ்வுலகிலும் மறுஉலகம் மகிழ்வென்று அறி
கீதாசாரத்தின் சாராம்சத்தை மனதில் அறி
பேராபத்து என பெருந்துயர் கொள்ளாதே
அப்பரிசு இவ்வுலகில் அனைவர்க்கும் உரிமை
மரணம் சுவர்க்கத்தின் மறுவாழ்வு என அறிந்து கொள்வாய்

புண்ணியவதியாம் புனிதவதியும்
புண்பட்ட உலகை விட்டு புனித உலகிற்கு
ஏகினார் என்று திருப்தி கொள்வோமாக

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் மகேசன் முன்பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கிய போது......




அமரர் மகேசன் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் விருந்தினராக விளக்கேற்றும் போது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வழிமுறை காட்டினாய் தலைமுறை போற்றுவோம்"

புவியில் பிறப்போர் புனிதராய்
புகழுடன் வாழ்ந்திட நினைப்பர்
புனிதமாய் நீ வாழ்ந்ததால் சுற்றம்
புகழுடன் நிலைக்க நீ நினைத்தாய்

அமரர் மகேசன் புனிதவதி அவர்களின் வாழ்க்கை குறித்த சான்று பகிரக்கிடைத்த வாய்ப்பை எனக்கு ஒரு பேறாகவே நான் நினைக்கின்றேன்.

நல்லவர் குறித்து இயம்பிட
நல்லருள் கிடைத்தால்
நலம் பெறும் நம் உள்ளம்
வளம் பெறும் நம் சுற்றம்

என்ற மொழி நடைக்கேற்ப பெயருக்ற்ேற "வாழ்வு" திருமதி. மகேசன் புனிதவதி அவர்களிடம் நான் கண்டேன் தூய்மைபெற இறைபாதமே சிறந்த இடம் என புரிந்து அவ்வழியே வாழ்வை நிலை நிறுத்திக் கொண்டவர்.

உள்ளத்துள் உறைவாயே
உன்னருள் அருள்வாயே
உண்மை வாழ்வு தருவாயே
உத்தமம் எனக்குள் இருக்குமே

என தூய்மை அன்புடன், குடும்பத்தில் தொடங்கி சமுகத்தின் எல்லா தடங்களிலும், தன் வாழ்வை, அழுத்தி சென்ற புனிதவதி அவர்களுடனான, எனது பழக்கம் மிகச்சிறிய கால எல்லைக்குள் உட்பட்டிருந்ததாயினும்.

உள்ளத்தை அறிந்து
உண்மை அன்பு பெற்றிட
உருண்டோடும் ஆண்டெதற்கு
உதிரும் ஒரு கணம் போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போல் சில காலங்களில் பல நினைவுகள், பல கதைகள், பல பாடங்கள், பல பண்புகள் என பல பரிமாணங்கள் மனித உறவுகளின் அர்த்தம் புரிய புனிதவதி காட்டிய வாழ்க்கைத் தேடல் என்னுள்ளத்தில் ஆயிரம் நினைவுகளை பதிய வைத்துள்ளது.

அமைதியான வாழ்வு
அர்த்தம் நிறைந்த தேடல்
அகம் நிறைய தூய்மை
அகிலம் போற்றும் வாய்மை

என நினைவுகளை எமக்குள் நிறுத்தி இறைபதம் அடைந்த திருமதி. மகேசன் புனிதவதி அவர் தன் வாழ்வால் நம் தலைமுறைக்கு ஒரு சிறந்த வாழ்க்கை பாதையை ஏற்படுத்தி சென்றுள்ளார். அவ்வழி செல்ல நம் உள்ளத்தை அர்ப்பணிப்போம்.

**கலைமாமணி வண T.S. யோசுவா**
**நிறைவேற்று இயக்குனர்**
**காவேரி கலாமன்றம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவதியார் ஒரு மாதுசிரோன்மணி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து அமரத்துவம் அடைந்து நிற்கும் அமரர் புனிதவதி மகேசன் அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை. ஆனாலும் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டொழுகிய அவரது வாழ்க்கைச் சுவடுகள் எமது மனங்களில் நிலையான பதிவுகளை ஏற்படுத்தியுள்ளன. முன்னுதாரணமாக அமைந்துள்ளன. கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தினுடைய முன்னைநாள் அதிபர் அமரர். வேலுப்பிள்ளை மகேசன் அவர்களுடைய துணைவியாராக இவர் எனக்கு அறிமுகமானார். அந்த நாள் முதலாக அவரது நட்பு எனக்குக் கிடைத்தது. கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறும் எல்லா விதமான வைபவங்களிலும் அவரைச் சந்திப்பேன்.

நிமிர்த்த நடையும்
நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சா
நடுநிலையும் கொண்ட

பாரதி கண்ட புதுமைப்பெண் அவராவர். பெண்ணாக அவரை நான் பார்த்தேன் பழகினேன். கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை வழியாக உறவு வலுப்பெற்றது. நீங்களும் வடமராட்சியைச் சேர்ந்தவர் என்பதால், உங்களோடு உறவாடுவதில் எனக்குத் தனிப்பட்ட விருப்பம் உண்டு என்று கூறுவார். இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்பதற்கிணங்க இல்லத்தலைவியாக இருந்து தனது கணவரினதும் பிள்ளைகளினதும் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்திருக்கின்றார். தற்காத்துத் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாத பெண்ணாக வாழ்வில் முத்திரை பதித்திருக்கின்றார். புனிதவதியார் என்ற இயற்பெயர் கொண்ட காரைக்கால் அம்மையார் போன்று எந்நேரமும் "சிவசிவ" என சிவனைத் துதித்தப் போற்றும் ஆன்மீக வாதியாக வாழ்ந்தவர். அன்னார் அமரத்துவம் அடைந்து விட்டார். என்ற செய்தி எனது காதில் இடியாக வீழ்ந்தது. இதயம் நம்ப மறுத்தது ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார். வருவரோ மாநிலத்தே. மாசற்ற தங்கமாயத் திகழ்ந்த மாதுசிரோன்மணி அன்னை புனிதவதி மகேசன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் யாவர்க்கும் ஆறுதல் கூறி நிற்கின்றேன். இவரது ஆன்மா இறையருளில் நிலைத்திருக்க எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!

**திருமதி. பி. மதுரநாயகம்**
**உதவிக் கல்விப்பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணைந்தும் அணையாத ஜோதி

21.03.2013 ஆதவன் குணதிசையில் தன் பயணத்தைத் தொடரும் அப் புலரிப் பொழுதினிலே கிளினிக்கிற்காக வைத்தியசாலைக்குச் செல்கின்றேன். அதன் நுழைவாயிலிலே கண்ணீரும் கம்மலையுமாக எமது இந்துவின் மாணவச் செல்வம் உமாசங்கர் அம்மா எங்களை விட்டுப் போய் விட்டா ரீச்சர் என்று கூறி விட்டு விம்மி விம்மி அழுகின்றார். என்னால் நம்பமுடியவில்லை. அவரையும் அவரது சகோதரி ராதையையும் எவ்வார்த்தையினாலும் ஆறுதற்படுத்த முடியவில்லை. " என்றோ ஒரு நாள் கூற்றுவன் வருவான் அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப் போற்றினும் போகான் பொருளோடும் போகான்" என்ற கூற்றினை மெய்ப்பித்து விட்டான் கொடிய அக்காலன்.

13.03.2013 சனிக்கிழமை கச்சேரிப் பிள்ளையார் கோவிலிலே அவரது அழகுத் தோற்றத்தை இறுதியாகக் கண்டேன். பூசை முடிந்த பின் என்னோடு வழமை போல் அளவளாவினார். அவர் இறுதியாக என்னிடம் கூறினார். "உங்கள் சைவ மங்கையர் கழகத்தில் என்னையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்" இவ் வார்த்தை இப்பொழுதும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஆலயங்களிலே நைமித்திய காலங்களிலே பயபக்தியுடன் பஞ்சபுராணத்தினை ஓதுவார். இயல்பாகவே இறை உணர்வும், இறையன்பும் கொண்ட இவர் பூர்வீக புண்ணியத்தின் பயனாக பாயிற் கிடவாமற் பாவியேன் காயத்தை 1/2 நொடிக்குள் கொண்டு போய் விடப்பா என்று சமயசித்தர் பாடியது போலப் பாடிப் பாடி சாவைப் பயமின்றி அணைத்துக் கொண்டார்.

இவரது துணைவராகிய திரு. மகேசன் அவர்கள் என்னுடன் இந்துக் கல்லூரியில் சக ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். காலகெதியில் அதிபராகக் கடமையாற்றினார்.. கந்தசஷ்டி விரதம் நோற்கும் ஒரே ஒரு ஆசிரியர் அவரேயாவார். கந்தனின் பேரருளால் அவரது பிள்ளைகள் அதிபராகவும், அரசசார்பற்ற நிறுவன உயரதிகாரியாகவும், ஆசிரியராகவும், வேறு உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.

அமரரின் சிரேஷ்ட புத்திரன் உமாசங்கர் அவர்கள் இந்து ஆரம்ப பாடசாலையினை தரமான பாடசாலையாக உயர்த்தியது மட்டுமல்லாது அழகான நந்தவனத்தினை அமைத்துச் சுற்றுச் சூழலை வனப்பாக கண்டோரைக் கவரும் வண்ணம் மாற்றியமைத்துச் சகல துறையினரதும் பாராட்டினைப் பெற்றுள்ளார். இவரது அன்னை கூட அகமகிழ்ந்து வியந்துள்ளார். ஆற்றல்மிக்க நிர்வாகியும், ஆலோசகருமாகிய பத்மசங்கர் இடம் பெயர்ந்து மீண்டும் குடியமர்ந்து அன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழும்படியாக அழகான இல்லத்தை அமைத்து அளித்துள்ளார். அவர் அவ்வீட்டின் சாமி அறையை ஆயலமன்ன வடிவமைத்து பேணி வந்துள்ளார். இன்னும் சிலகாலம் அம்மா இச் சூழலில் வாழ்ந்திருக்க இறைவன் அருளவில்லையே எனப் பெண்பிள்ளைகள் பிரலாபத்தைக் கேட்டு யாவரும் கண்ணீர் சிந்தினர்.

அமரர் திருமதி மகேசன் புனிதவதி அவர்கள் மிகவும் அடக்கமானவர். அன்பானவர், பண்பு மிகுந்தவர், பிறருடன் கனிவோடு பேசும் இயல்பினர், அவர் பேசுவது மற்றவர்கட்கு கேட்கமாட்டாது. அவ்வளவு மென்மையானவர். தலங்கள் தோறும் சென்று வழிபட்டு நல்ல குழந்தைகளைப் பெற்றெடுத்து மனநிறைவுடன் மகிழ்வோடு வாழ்ந்தவர். அவர் "அணைந்தும் அணையாத ஜோதியாக" எல்லோரது உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பாரென்பதில் ஐயமில்லை. மானிடரான்மா மரணமாவதில்லை.

**திருமதி. செ.சோமசேகரம் பிள்ளை**
**ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்,**
**செயலாளர், சைவ மங்கையர் கழகம்**
**கிளிநொச்சி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மகேசன் புனிதவதி

காலஞ்சென்ற அமரர் மகேசன் அவர்களின் பாரியார் அமரர். மகேசன் புனிதவதி அவர்களின் திடீர் மறைவு அனைவரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. அமரர்கள் இருவரும் கிளிநொச்சி பகுதியில் தலை சிறந்த சேவைகளை செய்தவர்கள்

அமரர் மகேசன் கிளிநொச்சி இந்து கல்லூரியின் ஆரம்ப வளர்ச்சியின் காரண கர்த்தாக்களில் ஒருவர். ஆச்சிரமம், குருகுல காந்தி நிலைய ஆரோகண மாணவர்களை ஒன்றிணைந்து இந்து கல்லூரியின் மாணவர்களின் கல்வி மற்றும் ஏனைய துறை வளர்ச்சிக்கு இரவு, பகலாக பாடுபட்டவர்.

அமைதியான சுபாவகம் கொண்ட மகேசன் ஆசிரியர் என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர். அவரது பாரியாரும் கிளிநொச்சி இந்து கல்லூரி வளர்ச்சிக்காக அமரர் மகேசன் ஆசிரியருக்கு அனைத்து வழிகளிலும் உறுதுணையாக இருந்தவர். அத்துடன் மட்டுமல்லாது அவர் வாழ்ந்த கிராமத்திலுள்ள அனைவருக்கும் மிகவும் வேண்டப்பட்டவராக இருந்தார்.

அமரர். மகேசன் புனிதவதி அவர்கள் இடம்பெயர்ந்த காலத்தில் அவரது பிள்ளைகளை பாதுகாத்து அவர்கள் அனைவருக்கும் செய்ய வேண்டிய அனைத்து கடமைகளையும் சிறப்பாக செய்தவர். அவரது பிள்ளைகள் அனைவரும் சிறப்பான கல்வியோடு இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. பிள்ளைகள் அனைவரும் அம்மா மீது அளவற்ற அன்பையும், பாசத்தையும் கொண்டிருந்தனர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்"
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற கூற்றுக்கிணங்க வாழ்ந்து காட்டிய அன்னாரது இழப்பு அவரது குடும்பத்தினருக்கும், கிராமதத்தினருக்கும் பெரும் துயராக இருப்பினும் அவரது ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கின்றேன்.

வைத்தியர். த. சத்தியமூர்த்தி
வைத்திய அத்தியட்சகர்,
பொது வைத்தியசாலை
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவரின் வழி நின்றவர்

மனிதர்கள் எப்படி வாழ வேண்டும், எந்தவகையில் இறந்து கொள்ள வேண்டும் என்று சமூகத்தின் அடித்தளத்தில் இருந்து சமய சமூக பணிகள் ஊடாக இந்த மண்ணிலே பல காரியங்களைச் செய்த அம்மையாரின் மரணம் எமது வாழ்விலும் அவரது சமய சமூகப் பணிகள் பசுமரத்தாணி போல் எமது மனதிலே நிற்கும் என்பது உறுதி. அத்துடன் அவருடைய வழியிலேயே நாங்களும் செல்ல வேண்டும் எனும் நிலைப்பாட்டை எங்களுக்கு எடுத்துச் சொல்லிருக்கிறார்.

அமரரது நட்பு அமரர் துணைவர் மகேசன் மூலமாக நான் அரசாங்க அதிபராக இருந்த காலத்திலே சமூகப் பணிக்காக மிகவும் தன்னை அர்ப்பணித்து என்னுடன் அடிக்கடி கிராமம் பற்றி கலந்துரையாடி கிராமத்தின் தேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருந்தார். தன் துணைவரது சமூகப்பணிக்கு துணையாகவும், இணையாகவும் பக்கபலமாக இருந்து செயற்பட்டார்.

அமரர் தனது குழந்தைச் செல்வங்களை நல்ல முறையிலே வளர்த்து எவ்வாறு தாய் தன் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக உழைத்து அர்ப்பணித்து தியாகத்தோடு தன் கணவன் கூற்றில் விட்டிருக்கின்றார் என்பதை காணமுடிகின்றது. அந்தவகையில் தியாகம் செய்து தன் குழந்தைகள் அனைவரையும் உயர்நிலைக்கு உயர்த்திவிட்ட ஒருவராக காணப்படுகின்றார். இவரது சேவைக்கு நாம் தலை வணங்க வேண்டும்.

அமரர் சமூகத்தில் உயர்ந்தவராகவும், மக்கள் மதிக்கப்பட்டவராகவும் நன் பண்போடும், சிறப்போடும் வாழ்ந்திருக்கின்றார். தன் குழந்தைகளை வளர்த்திருக்கின்றார். இந்தவகையில் இவரது சமய வாழ்வு, சமூக வாழ்வு, குடும்ப வாழ்வு அனைத்துமே எங்களுக்கு உதாரணமாக இருக்கும். அந்த உதாரண புருஷரை இந்த நேரத்திலே இழந்திருக்கின்றோம். அன்னாரது வழியிலே வாழவும், ஆத்மா சாந்தி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


திரு. தி. இராசநாயகம்
ஓய்வுநிலை அரச அதிபரும்,
ஓய்வுநிலை வடக்குமாகாண பிரதிச் செயலாளரும்,
ஆச்சிரம சைவ சிறுவர் இல்ல தலைவரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# It is difficult to believe that Mr.Pathmashankar's mother Mrs. Mahesan Punithavathy is no longer with us.

I hads the privilege of meeting her and enjoying her wonderful hospitality in February 2012, when Shankar invited to stay at their home during my short visit to Killinochchi. I was a stranger to the family and I had not met or known Mrs Mahesan Punithavathy and her sons before that time. like everyone else in the Vanni this family too had their share of difficulties and hardships. they were only then starting to rebuild their lives. but I was invited to stay with them and made very welcome.

It was amazing to me feel how welcome I was made during my stay there. Mrs. Mahesan Punithavathy was particulary keen to see to all my comforts and provide me with most delicious ood that I liked. I was treated as one of the family . nothing seemed too much trouble. the house was still under rebuilding and renovation but I was made comfortable in every way.

Mrs. Mahesan Punithavathy was a very quite person. she had a gentle and dignified character. she was not a person of many words but as the head of the family she was calm but there was a sense of inner strength that was evident in all her relationships. I am sorry that I missed seeing her during my recent trip to Killinochchi.


She will be missed very much by all those close and dear to her. may her soul rest in peace.

*Dr.Poemga Jeyaratnam*
*United kingdom.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் மகேசன் அவர்களின் பிறந்த தினநூலக திறப்பு விழா

2012-12-05



அமரரின் துணைவர்
அமரர் மகேசன் அவர்களின்
ஞாபகார்த்த சிறுவர் நூலக
திறப்பு விழா நிகழ்வில்
← துணைவரின் திருவுருவப் படத்திற்கு
மலர்மாலை அணிவிக்கும் போது....

அமரரின் துணைவர்
அமரர் மகேசன் அவர்களின் பிறந்தநாள்
ஞாபகார்த்த சிறுவர் நூலக
திறப்பு விழா நிகழ்வில்
பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள்
பிள்ளைகள், பேரப்பிள்ளையுடன்..... ↓




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Visit to Kilinochchi

My Visit to Malayala Puram in Kilinochchi was a short visit. however, I was pleased that I was at your house as a guest for this duration. when this visit was organized my family, particularly my wife was worried as to where I was going to stay? would anyone look after me as my family would? they were of course guite understandable worries.

when I was brought into your house, I felt comfortably at ease. your mother welcomed me and made me feel at home. her caring nature reflected from the way she treated me. the exchanges of family details between us made me feel like we were known for year. she was a caring and family oriented person. In my 'skype' meetings with you, I have always enquired after her. surely, she will be missed. her nature and the caring manner she had will always remain as good lessons and education to our lives. her braveness and the courage she exhibited through you and your siblings are teachings to remain for us and for the community for years.

*Muthu. R.Muthukumar*
*project Manager*
*Make a Difference Srilanka*
*London.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களில் நிழலாடும் புன்சிரிப்பு

ஆசையம்மா !

....இப்படித்தான் சிறுவயது முதல் நான் உங்களை அழைப்பேன் உண்மையில் எனக்கு ஆசையான அம்மாதான்.

உங்கள் அன்பும் பாசமும் இப்படித்தான் சொல்ல வைக்கிறது. ஆசையம்மா என்றாலே எனக்கு முதலில் ஞாபகம் வருவது உங்கள் அன்பான புன்னகைதான் எந்நேரமும் சிரிப்புடன் சந்தோசமாய் இருக்கும் உங்கள் முகம் தான்.

நம்தாய் நாட்டில் நான் இருந்த போது பழகிய நாட்களில் உங்களால் எனக்குக் கிடைத்த அன்பும் பாசமும் அளவிடமுடியாதவை. இளமையான எண்ணங்கள் அழகான வாழ்க்கை முறை அழகான ரசனை சிறுபிள்ளைகளைப் போல் எங்களுடன் பழகிய முறை இப்படிப்பல சிறுவயதில் உங்கள் மீது எனக்குப் பிடித்தவை என்றும் மறக்க முடியாதவை.

அதைவிட மேலாக சுவிஸ் நாட்டிற்கு நீங்கள் வந்திருந்தபொழுது உங்களுடன் நிறையவே பழக்கியிருக்கிறேன். உங்களுடன் சேர்ந்து பல இடங்களுக்குப் போயிருக்கிறோம். அப்போதெல்லாம் உங்கள் ரசனையும் எதையும் ஆர்வத்துடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் பார்த்து மகிழ்வதை பார்த்து ரசித்திருக்கிறோம்.

அப்போதெல்லாம் என்னவோ எனது அம்மாவே என்னுடன் வருவது போல் ஓர் உணர்வு என்னுள் தோன்றி என்னை மகிழ்விக்கும்.

என் பிள்ளைகள் அவர்கள் வயதுப் பிள்ளைகளின் தாத்தா பாட்டி அப்பப்பா அப்பம்மா என்றெல்லாம் இந்நாட்டிற்கு வந்து போக எங்களிற்கு ஏன் எவரும் வருவதில்லை என்பார்கள். நீங்கள் வந்தபோது உங்களைத் தான் காட்டினேன். உங்களுடைய அப்பம்மா என்று நீங்கள் இங்கு வந்த நாட்கள் எங்கள் பல ஏக்கங்கள் எங்களைவிட்டு விடைபெற்றுச் சென்ற நாட்கள்.

என்னுடைய மனைவி கோசலா உங்களை அத்தை என்று உங்களைப் போல் சிரித்துக் கொண்டே கூப்பிடுவார். அதைப் பார்த்து நான் பெருமைப்படுவேன் ஏனென்றால் என் தாயின் ஸ்தானத்தில் அவள் உங்களைப் பார்க்கிறாள்.

மறக்க்முடியாத அந்த நாட்கள் என்றும் பசுமையானவை. முதுமையிலும் இளமை நீங்கள். இன்று ஆசைஐயா தன்னுடன் கூட்டிச் சென்றாரோ.

ஆசையம்மா இறந்துவிட்டார் என்று சந்திரகுமார் சொன்ன போது திடீர் அதிர்ச்சியில் உறைந்து போன என் மனம் சில நிமிடங்கள் வாயடைத்து நின்றது அருகில் இருந்த என் மனைவி கோசலாவிடம் சொன்ன போது உடன் வாய் விட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதுவிட்டார். தொலைபேசியில் செய்தி வந்த நேரம் நள்ளிரவு என்பதால் ஏதோ ஓர் விபரீதம் நடந்து விட்டதை முதலிலேயே உணர்ந்திருந்தோம். இதை உண்மை என்று நம்ப உடன் மனம் மறுத்தது.

இன்று வரை இது பொய்யாக இருக்கக் கூடாதோ என மனம் ஏங்குகிறது.

இங்கே எழுத்துருவாய் வரும் என் ஞாபகங்கள் அன்புருவாய் எங்களுடன் கலந்திருக்கும் உங்களுக்கு ஓர் அன்பு மடலாகவே எழுதுகிறேன்.

ஒருவருக்கும் ஆறுதல் சொல்லவில்லை நீங்கள் எங்களை விட்டுப் பிரியவில்லை என்ற நம்பிக்கையில்

**நாதன் கோசலா,**
**விஷ்மி, அருஷ்**
**சுவிஸ்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அன்புடையாள் என் அன்ரி

புனிதம் அன்ரி! எனது அம்மாவின் இனிய சகோதரி. செழிப்பும் வனப்பும் மிக்க பாசப்பெட்டகம். தன் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியைக் குளிர்ச்சியைத் தக்க வைத்துக் கொண்டிருந்தவர். தன்னைச் சூழவிருந்தோரையும் அத்தகைய மனோபாவத்தில் இருக்கத தன் அன்புச் சிரிப்பாலும் செல்லக் கதையாலும் உயிரூட்டியவர். கலகலப்பான அவருடைய சுபாவம் எங்கள் எல்லோரையும் எப்போதுமே வசீகரித்துக் கொண்டிந்தது. காணும் தோறும் பாசத்தை அள்ள அள்ளக் குறையாமல் எமக்குத் தந்தவர்.

வடஅல்வாய் குருக்கட்டு அரசடிப்பிள்ளையார் கோவிலின் முதலாம் திருவிழாவிற்கு நாங்கள் எல்லோரும் தகனையில் கூடுவதுண்டு. கொழும்பில் இருந்து ராசன் அன்ரி குடும்பம். கிளிநொச்சியில் இருந்து புனிதமன்ரி குடும்பம் யாழில் இருந்து எங்கள் குடும்பம் திருவிழாவிற்காகப் போய்ச் சேருவோம். அங்கு தாத்தாவின் மூன்று சகோதரிகளினதும் பிள்ளைகளினதும் உபசரிப்பில் நாம் திளைத்துக் கொள்வோம். அங்குதான் அன்ரியுடனான எனது நெருக்கம் மிகவும் இருந்தது. நித்தியகல்யாணிப் பூக்களைக் கைநிறைக் கொண்டு வந்து சாமிக்கு வைத்து மனமுருக அவர் தேவாரம் பாடும் அற்புதக் காட்சி எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கும். அவரின் பக்தி எப்போதும் அவரையும் அவரது குடும்பத்தையும் நல்வழிப்படுத்திக் கொண்டிருந்தது. அன்ரி சத்யசாய்பாபாவிடம் அளவு கடந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்திருந்தா். அந்த அருளும் ஆசியும் கிடைத்தமையால் தான் பாபாவின் புனித நாளான வியாழக்கிழமை அன்ரியும் இவ்வுலகு விட்டு இறைபடி சேர்ந்தார்.

1976ஆம் ஆண்டு பாடசாலை விடுமுறைக்கு நான் கொழும்பு சென்ற வேளை அங்கு அன்ரி குடும்பமும் வந்திருந்தது. எனவே அவர்களுடன் சேர்ந்து நான் கொழும்பைச் சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பெரியப்பாவும் அன்ரியும் தங்களது பிள்ளைகளில் ஒன்றாக என்னையும் கருதி அனைத்தையும் செய்தனர். பின்னர் அவர்களுடன் சேர்ந்து கிளிநொச்சி வந்தேன். அங்கும் அன்ரியினதும் அக்குடும்பத்தினதும் அன்பில் திளைத்திருந்தேன். யசோக்கா எம்மோடு இருந்து சிறிது காலம் கல்வி கற்றபோது எங்கள் இரு குடும்பத்திற்குமிடையேயான உறவு நெருக்கமானது.

அன்ரி நல்லதொரு ஜீவன். அந்த நல்ல உள்ளத்திற்கேற்ப பாசமான சகோதரர்களையும் நல்லதொரு கணவனையும் அன்பும் அறிவும் கொண்ட பிள்ளைகளையும் இறைவன் அவருக்குக் கொடுத்திருந்தார். அறிவும் கொண்ட பிள்ளைகளையும் இறைவன் அவருக்குக் கொடுத்திருந்தார். துன்பம் அணுகாத வாழ்வில் மரணத்தைக் கூடத் துன்பமின்றி அவர் எதிர் கொண்டாரென்ற திருப்தியே எம்மை நாம் தேற்றிக் கொள்ள உதவுகின்றது. கனத்த நினைவுகள் எம்மை வழி நடத்தும். அன்ரியின் ஆத்மா சாந்தி பெறுக.

**அன்புப் பெறாமகள்,**
**மாதவி சிவலீலன்,**
**லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடை அகத்தினள் அக்கா நீ என்றும் !

மண்ணின் மகளாய் மாதர சிபுனிதம்
வண்ண மலராகி வந்தாள்!

பூக்களின் சிரிப்பும் புனிதக்கா புன்னகையும்
பாக்களாய் மலராதோ பழகில்!

புன்னகையும் பண்ணுடை புதுத்தமிழும் கலந்து
இன்புறவே பேசுவாள் இயல்பு!

மாபலா இனிப்பென்பார் மழலைமொழி புனிதக்கா
தேமா மொழிவிருந்து தெரியார்!

கலகல வெனநல்ல கற்கண்டு போலினிப்பாய்
நலம்தேர்ந்து மகிழ்வாய் நயந்து!

உள்ளத்தே கபடமில்லா உண்மையே உதிரும்
கள்ளமற்ற கண்ணகியாய் காண்!

வாய்மையே தெளிந்து பேசி வந்தோரை வாழ்தேந்தும்
தாய்மை உடையாள் இவள்!

பெண்மையின் பெருமையால் பெருவாழ்வு வாழ்ந்தாள்
கண்ணின்று அகலாள் கடிந்து!

பெண்ணின் அருமைதனைப் பேறாய் புனிதம்மா
எண்ணிப் புகட்டினாள் அறி!

அல்வாய்மண் தேடியருள் ஈயும் குருக்கட்டான்
எல்லா விழாக்களிலும் இவளே!

பக்தித் தமிழ் பரவச இசையூட்டி
சக்தி பெற்றாள் சார்ந்து!

தம்பியெனும் வார்த்தைக்கும் தாகம் தணியாதோ?
எம்புனிதக் காவின் அழைப்பில்!

கண்டாலே அன்புநதி கொந்தளிப்பில் மனமுருகி
நிண்டாள் தினமும் நினை!

**அல்வை கோ.தர்மகுலசிங்கம்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அன்பு அத்தை

அத்தை என்றால் உடனே நினைவு வருவது அவரது அன்புமுகம், செல்லகதை, சிரித்த படியே எல்லோரையும் அரவணைக்கும் தன்மை.

எனது அப்பா, பெரியப்பா, சித்தப்பாமாரின் அருமை தங்கை, அன்பு அக்கா அவர்களின் உயிர் என்று கூட சொல்லலாம். அத்தையை தாம் எப்படியெல்லாம் வளர்த்தோம் என்று எனது அப்பா கதை கதை கதையாய் சொல்லவார். எனது அப்பாவை எப்பொழுது கண்டாலும் அவரை பிரிந்த கவலையை மறைப்பதற்காக "சின்னண்ணை ஏன் மெலிந்து விட்டீர்கள்" என கேட்டு ஒரு முறை அழுது விடுவா. அப்படி தனது சகோதரர்களில் உயிரையே வைத்திருந்தார் எனது அத்தை. அண்ணாமாரை கண்டவுடன் தனக்கும் பிள்ளைகள் உள்ளார்கள் என்பதை மறந்து குழந்தையாக மாறிவிடுவார். அவர்களுடன் கதைக்கும் போது செல்லமாகவும், அன்பாகவும், தனக்கு மட்டுமே தனது சகோதரர்கள் சொந்தம் என்ற சின்ன கர்வமும் தெரியும். இவற்றை பார்த்து பல தடவை நான் இரசித்ததுண்டு.

எனக்கும் அத்தைக்கும் இடையில் ஒரு விதமான அன்பு உள்ளது. நான் அத்தையை போல் என்று சொல்லதில் எனக்கு சிறு பெருமை. அதேபோல் அத்தையும் நான் தன்னை போல் என சொல்வதுண்டு. கடைசியாக காணும் பொழுது கூட இறுகக் கட்டி அணைத்து தன்னை மாதிரியே சிரித்த படி, குழந்தை தனமாக, செல்லமாக கதைக்கிறாய் வாழ்க்கையில் சந்தோசமாக இருப்பாய் என வாழ்த்தினார்.

அத்தை தனது சகோதர்களில் எவ்வளவு அன்பு வைத்திருந்தாவோ அதேயளவு அவர்கள் பெற்ற பிள்ளைகள் மீதும் பாசம் வைத்திருந்தர். அவர்களின் பாச பிணைப்புக்கு சான்றாக நான்கு சகோதரர்கள் வீட்டிலும் பிள்ளைகள் இருக்கிறார்கள். அத்தை இறந்த செய்தி கேட்டு நாம் துடித்து விட்டோம். அப்போது தான் அவரில் நாம் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறோம் என புரிகிறது.

எனது அப்பப்பாவின் தீர்க்க தரிசனமோ என்னமோ தனது அருமை மகள் நிச்சயமாக எல்லா வகையான புண்ணியமும் செய்து கைலையில் சிவபெருமானின் காலடியில் இருப்பார் என தெரிந்து அத்தைக்கு புனிதவதி என்றும் வீட்டுக்கு காரைக்கால் என்றும் பெயரிட்டு சென்றுவிட்டார். காரைக்கால் அம்மையார் போல் எமது அத்தையும் இறைபதம் அடைய பிராத்திப்போம்.

மருமகள்
ஆனந்தி முரளிதரன்
லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் புனிதவதி மகேசன்
# வாழ்வாங்கு வாழ்தல்

கிளிநொச்சி மாவட்டத்தின் குடியேற்ற முறைமையில் முகிழ்ந்தெழுந்த பண்பாட்டில் யாழ்ப்பாண சமூகத்தின் எச்சங்களுக்கப்பால் புதிய பண்பாடு உருவாக்கப்பட்டு அதுவே கிளிநொச்சியின் அடையாளமாக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் சமூகத்தில் மிக காத்திரமாக வாழ்ந்து செழித்து மலர்ந்த குடும்பங்களில் மகேசன் மாஸ்ரரின் குடும்பமும் முக்கியமானது. நான் சிறுவனாக இருந்தகாலம் முதலே இக்குடும்பத்தோடு நான் ஐக்கியமாக இருந்து வந்துள்ளேன். அவர்களின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் நான் ஒரு அயலவனாக இருந்திருக்கின்றேன். நல்ல மனிதாபிமானமும் பிறர்நலன் மீது அவர்கள் காட்டும் அதீத ஈடுபாடும் என்னை கவர்ந்தது. புனிதவதி அம்மையார் காணும் போதெல்லாம் கல்வி பற்றியும் எங்களதும் அயலவர்களதும் முன்னேற்றம் பற்றியே விசாரணை செய்வார். எதனையும் எதிர்கணியமாக பாராது நேர்நிலை சிந்தனையை கிராமத்தில் கட்டியெழுப்பும் ஒரு குடும்பமாக இவர்கள் இருந்தார்கள். அதனால் நல்ல நிறைவான பிள்ளைகள் அவர்கள் பெற்று உயர்வடைந்தார்கள். கல்வியூடான சமூகமாற்றம் என்ற வழித்தடத்தில் பயணித்து மதிப்புமிக்க குடும்பம் ஒன்றை வழிப்படுத்தி தலைமைதாங்கி தன் பணியை நிறைவாக செய்து எவ்வித சிரமமின்றி மரணத்தையும் கூட இலகுவானதாக பெற்று எம்மை விட்டு பிரிந்த புனிதவதி அம்மையாரின் ஆற்றாமை எம் எல்லோரையும் "வாழ்வாங்கு வாழ்தல்" என்ற சாதனையை நிலைநிறுத்திய இவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

**அன்புடன்**
**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**உதவி திட்டமிடல் பணிப்பாளர்**
**மாவட்ட செயலகம் கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திடுவீர்

திருமதி மகேசன் புனிதவதி அவர்களின் மறைவுச் செய்தி எமது இயங்கு சக்தியை ஒரு தடவை நிறுத்தியது. அந்தளவுக்கு அன்னாரின் உறவும் தொடர்பும் எம்மை வியாபித்து வைத்திருந்தது. ஊரில் உள்ளவர்கலெள்ளாம் தனது உறவாக நினைத்தவர் அமரர் அவர்கள். தனது பிள்ளைகள் போல் எல்லோரையும் அரவணைத்தவர். பிறர் துன்பத்தை தன் துன்பமாகவும், மற்றோர் மகிழ்வை தன் மகிழ்வாகவும் கொண்டு வாழ்ந்த பெருந்தகை, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தன் மக்களை பெற்றெடுத்து ஊர் போற்ற வாழ வைத்து மகிழ்வாக வாழ்ந்த அமரர் இன்று தெய்வமாகி விட்டார் என்பது நெஞ்சை நெகிழ வைக்கிறது.

அமரர். மகேசன் அவர்களின் அரவணைப்பால் ஏற்பட்ட உறவு பிள்ளைகள் எல்லோரும் எம் நண்பராகி புனிதவதி அவர்கள் எம் தாயாகி தொடர்ந்த வாழ்வு இன்று அன்னாரின் இழப்பால் துயர்பட்டு நிற்கின்றது.

இறப்பு என்பது இயற்கையின் நியதி. பிறப்பு உண்டேல் இறப்பும உண்டு. அமரர் புனிதவதி அவர்கள் தலையால் நடந்து இறைவனைச் சேர்ந்த காரைக்கால் அம்மையாக இறைவனின் பாதார விந்தங்களால் ஆறுதல் பெற இறைவனை வேண்டி அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கு இறைவனை வேண்டுகின்றேன்.

**அ. பங்கையற் செல்வன்**
**அதிபர்,**
**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013ல் கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய விளையாட்டுப் போட்டியின் போது....




2013ல் கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையில் விளையாட்டுப் போட்டியின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாக இல்லாத தாயே

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துடன் வைக்கப்படும்."

வாழ்வின் இருப்பு என்பது வாழ்ந்து மடிந்த பின் ஒருவர் வாழும் நிலையில் தங்கியுள்ளது. இதற்கு எம்மோடு வாழ்ந்து மடிந்தவர்கள் எமக்கு பாடமாக இருப்பது சான்று பகர்கின்றது. புனிதவதி அம்மாவும் பெயருக்கு ஏற்றால் போல் மாங்கனி சுவை பகரும் வார்த்தைகளால் மானிடர் முதல் வானவர் வரை தன்வசப்படப்பேசியும் பாடியும் உயர்ந்து மனங்கவரப் பெற்ற அருமைத் தாயாக வாழ்ந்துள்ளார். அருமை ஆசான் அமரர் மகேசன் எண்ணத்தின் சக்தி மிகு எச்சங்களாக வெளியீடு செய்துள்ளமை அவரது வாழ்வின் தொடராக அமைகிறது. ஒவ்வொரு மனிதமும் தம் வாழ்வின் மாதிரிகளாக எங்கோவிருக்கும் எவரொருவரையும் எண்ணிப்பார்க்காது எங்களோடு வாழ்ந்து எமக்காக உருகிநின்று ஒளி கொடுத்திருந்த தாயின் தயையை நினைவில் கொண்டு வாழ்வது சிறப்பு இதை அறியாது வாழ்பவர் இருப்பின் அதில் பயன் ஏதும் கிடையாது.

பள்ளிப் பருவம் முதலாக தொழில் நிலையில் நான் உயர்நிலையை அடையும் வரையில் அமரர்களான மகேசன் புனிதவதி அவர்களது அன்பும் காப்பு கணிப்பும் நிறைவாக கிடைக்கப்பெற்ற வகையில் என்னைப் போல் சமூகத்தில் புலருளர். மேலாக அவர்கள் பிள்ளைகள் சமூகத்தின் பெரும் தடையங்களாக உள்ளமை என்றும் அமரர்கள் வாழ்வு நின்று நிலைக்கு மென்பதில் ஐயமில்லை அவர்கள் ஆத்மா சாந்திபெற எங்கள் நாகபூசணி அம்மன் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி, சாந்தி, சாந்தி

த. கண்ணபிரான் அதிபர்
கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா
வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளும் நினைவுகளில் ...

ஆசை ஐயா வீட்டுப் போகின்றோம் ........ எங்கள் அப்பா கூறியதும் எமது சந்தோசச் சிறகுகள் பறக்க ஆரம்பிக்கும்.

அன்றைய நாள்களின் பசுமை நினைவுகளும் பாசப்பிணைப்புக்களும் நினைக்குந்தோறும் இன்பமானவை.

எனது அப்பாவிற்கு நேரே மூத்தவர்தான் அமரர். வேலுப்பிள்ளை மகேசன் அவருக்கும் நேரேயும் இரு தமயன்கள் இருப்பதால் இவரை ஆசை ஐயா எனவும், இவர் தம் துணைவியாரை ஆசையம்மா எனவும் தான் அழைப்போம்.

கிளிநொச்சி உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் கிராமிய மணமும், ஆசை ஐயா வீட்டு உபசரிப்பும் சகோதரர்களின் நேசிப்புக்களும் என்றும் மனதிற்கு உகந்தவை.

ஆசை ஐயா ஆசிரியத் தொழிலை அர்ப்பணிப்புடன் செய்து உருவாக்கிய நினைவுகளின் கல்விக் கூடங்கள் இன்று அவரின் சேவை மதிப்பை எமக்குக் காட்டி நிற்கின்றன.

வள்ளுவனுக்கேற்ற வாசுகியாக வாழ்ந்து பெயரிலும் புனிதம். வாழ்விலும், புனிதமாக வாழ்ந்த எங்கள் ஆசையம்மாவினதும் சகோரர்களினதும் விருந்தோம்பல்கள் என்றும் மறக்க முடியாதவை.

1987ஆம் ஆண்டு மே மாதக் கடைசி வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து தற்காலிக தேவை கருதி உருத்திரபுரத்தில் ஆசையா வீட்டில் சில தினங்கள் இருந்தேன். ஆசையம்மாவின் கண்ணியமான உபசரிப்பு மறக்கமுடியாதது.

வடமராட்சி அல்வாயில் எங்கள் அரசடி விநாயகனின் பிள்ளையார் கதை, திருவெம்பாவை, திருவிழா எதுவென்றாலும் ஆசை ஐயா குடும்பத்தவரின் பங்களிப்பு அங்கே இருக்கும்.

ஆசையம்மா கணீரென்ற குரலில் இறைவனின் தோத்திரங்கள் பாடும் போது பக்தி உணர்வு மேலிடும்.

எம்மூரில் உறவுகளின் சுக துக்கம் எதுவென்றாலும் ஓடோடி வருவார். பக்கத்தில் இருப்பவர்களே போகப் பஞ்சிப்படும் நிலையில் ஆசைஐயா குடும்பத்தவரின் விரைவான வருகை அங்கிருக்கும்.

யாழ்ப்பாண நகரை அண்டிக் குடியிருக்கும் எமது உறவுகளின் இன்ப துன்பங்களிலும் தவறாமல் பங்கெடுப்பார்.

தன் பிள்ளைகளுக்கும் ஊரை, உறவுகளை அவர் தம் சேமங்களை அறிமுகம் செய்வார். தன் பிள்ளைகளின் நலனிலும் உயர்வான அக்கறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுப்பார். பிள்ளைகளின் நண்பர்கள் வீட்டிற்கு வரும் போதும் பிள்ளைகள் போல அன்பு பாராட்டிப் பழகுவார். கிளிநொச்சி நகர் சார்ந்த பிரதேசத்திலும் நட்பை அன்பை பேணிய விதம் மெச்சத்தக்கது.

ஆசையம்மா திடீரென மறைந்த போது அவரின் ஆசை ஐயாவின் பிள்ளைகளின் ஆளுமைச் சிறப்பைக் காணக்கூடியதாயிருந்தது. ஆயிரமாயிரம் மக்கள் கிளிநொச்சியிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் திரண்டு வந்தார்கள்.

அஞ்சலிப் பிரசுரங்கள், டிஜிற்றல் பனர்கள் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகள் என வந்து குவிந்தது.பெரிய பெரிய பதவிகளை அலங்கரித்தவர்கள் எல்லாம் அஞ்சலி செய்தார்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மாதரசி இவரென மாநிலமே திரண்டு கூறியது. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு இவர்கள் செய்த சேவைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. காலம் தன் பெட்டகத்தில் மகிழ்வாகச் சேமித்து வைத்துள்ளது முன்மாதிரிக்குரியது.

**வேதநாயகம் தபேந்திரன்**
**மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்,**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் புனிதவதியின் நினைவுகளைச் சுமந்து சில வரித்துளிகள்.

கடந்த 1986ல் ஏற்பட்ட சந்திப்பின் பின்னர் மேற்கொண்ட நட்பின் காரணமாக குடும்பத்தின் உறவுப் பாலம் நீண்டது. அன்று முதல் இவரது இறப்புவரை நான் கண்ட மனிதர்களில் மாறாத மனம் கொண்ட மாணிக்கமாய் வாழ்ந்த புனிதவதி அம்மையாரின் வாழ்க்கை பற்றிய குறிப்பை எழுதுவது இயலாதகாரியம் இருப்பினும் இவரது நினைவுத் துளிக்காக சில வரிகள் கவிதையில் வடிக்கின்றேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வைத்துள் வைக்கப்படும்"

என்ற திருவள்ளுவர் வாற்கிற்கிணங்க இப்புவியில் அவதரித்து மிகச்சிறப்பாக வாழ்ந்து காட்டிய அமரர் புனிதவதி அம்மையாரின் நினைவுகளை சுமந்து சில வரிகள்.

அன்பின் பிறப்பிடமே
அறிவின் உறைவிடமே
பாசத்தின் சிகரமே
பண்பின் திருவுருவே
கருணையில் நீங்கள் கடவுளம்மா
சிரித்த முகத்தோடு சீரோடு வரவேற்று
வேண்டும் உதவிகளை விருப்போடு செய்திடும் - புனிதவதியம்மாவே
எம் சிந்தை கலங்கிடவே கதையேதும் கூறாது
காலனடி சேர்ந்தீரோ
அன்போடு பேசி அரவணைக்கும் அன்னையுள்ளம்
பண்போடு உபசரிக்கும் பாச உள்ளம்
புனிதவதி என்ற பெயருக்கு இலக்கணமாய் வாழ்ந்து
இப் பிரதேச வாழ் மக்களின் மனங்களை
வென்றெடுத்த அம்மையே - உங்கள்
நினைவுகளை எவரும் இவ்வுலகில் மறந்திட மாட்டார்கள்.

வாழும் மக்களுக்கு வாழ்க்கை என்றால்
என்ன? என்பதை உங்களின் வாழ்க்கை மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து காட்டிய அதி உத்தம - புனிதவதித்தாயே
உங்களைப் போலவே உங்களின்
குழந்தைச் செல்வங்களையும் இப்பூவுலகில்
வாழ் வழி செய்தாயே இதுவே - உங்களது
ஆத்ம சாந்திக்கு இறைவன் கொடுத்த - வரப்பிரசாதமாகும்
தாய் வேறு பிள்ளை வேறாக வாழும்
இப்பூவுலகில் வாழ்க்கைக்கு உரம் கொடுத்து
வாழ்க்கையின் உன்னதத்தை - வானுயர
வளர்த்த தாயே - உங்களைப் போன்று
உங்கள் பிள்ளைகளும் வாழ்ந்திடுவர் வாழ்ந்திடுவர்
நிச்சயமாய் வாழ்ந்திடுவர்.

அமரர் புனிதவதி அம்மையாரின் நினைவுகளைச் சுமந்து அவர் வாழ்ந்த வாழ்க்கையின் வழி தொடர நாமும் முயற்சிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

*சீ.* **துரைசிங்கம்**
**பொதுமுகாமையாளர்**
**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**கிளிநொச்சி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நிறை அத்தையே!

அன்பு நிறை அத்தையே!
அகிலமதை ஏன் துறந்தாய்
இன்பமதை யாமிழந்தே
இப்புவியில் வாடுகின்றோம்
என் மக்கள் போலெம்மை
உடனிருந்து காத்தீரே
நன்மைகள் எமக்களித்து
நல்வாழ்வு வாழவைத்தீர்
ஆலயங்கள் கூட்டிச் சென்றீர்
அங்கே பஜனை பாட வழி சமைத்தீர்
காலமெல்லாம் எம்மைக்
களிப்புடனே வாழ வைத்தீர்
தோடு குத்தும் நாள்தனிலே
துணை நின்று உதவி செய்தீர்
வாடிடாது நாம் வாழ
வையகத்தே வழி வகுத்தீர்
அத்தை என்று யாமழைக்க
அன்புடனே அரவணைப்பீர்
இப்போது உம்பிரிவால்
அத்தை என்று இனியாரை அழைப்போம்
உத்தமியாய் வாழ்ந்தீர்
உறவுக்கு உரம் சேர்த்தீர்
பிரிவதற்கா எம்முடனே
பேரன்பு தான் கொண்டீர்
உருகி மனம் வாடுது அத்தை
உம் பிரிவை தான் எண்ணி
கருவிழிகள் நீர் சொரிய
காசினியில் உமைத் தேடுகின்றோம்.

**கில்சன் -தர்மினி**

**தசன் - இந்து**

**சாயி**

**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் பதிவில் சில துளிகள்

அமரர் முருகேசு வாத்தியாரின் ஒவ்வொரு சகோதரமும் திருமணம் செய்து குடும்பமாகிக் கொண்டாலும் தங்களது மூத்தண்ணையின் வார்த்தைக்கும், செயலுக்கும் எப்பொழுதும் கட்டுப்பட்டவர்களான கட்டுக் கோப்போடு வாழ்ந்த ஒரு குடும்பம் என்றால் அது மிகையாகாது.

இன்று இக்குடும்பம் ஒரு மரம் பல கிளைகளைப் பரப்பி பெருவிருட்சமாவது போல வளர்ந்து நிற்கிறது. அந்தக் கிளைகளில் ஒன்றில் மலர்ந்த 'பூ' ஒன்றே எங்கள் அக்கா அமரர் மகேசன் புனிதவதியவர்கள்.

அமரர் புனிதமக்கா அவர்கள் அக்குடும்பத்தில் ஒரேயொரு பெண்பிள்ளையாக, இளையமகளாகப் பிறந்தவர். அதனால் அக்குடும்பத்தின் செல்லப்பிள்ளையும் ஆவார். அவர் அக்குடும்பத்தில் மிகவும் செல்லமாக வாழ்ந்தார் என்பதற்கு அவரது அறுபத்தொன்பது வயதுவரை அவ்வியல்புகள் அவருடன் தொடர்ந்து வந்ததை என்னால் காணமுடிந்தது.

அல்வாயிலிருந்து புறப்பட்டு கிளிநொச்சியில் குடியிருப்பதற்காக குடியேறிய போது அமரர் இளைதம்பி அவர்கள் சிறந்த உழைப்பாளியாகக் காணப்பட்டார். அவரது உழைப்பின் முயற்சியால் அவர்களது வாழ்க்கை வளம் பெற்றது.

அன்றிலிருந்து இன்றுவரை வடமராட்சிப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் செல்லும் எமது உறவுகளை வரவேற்று விருந்தளித்து தங்கள் வீட்டிலேயே தங்கவைத்து வழியனுப்பி வைக்கும். வந்தாரை வரவேற்கும் பண்பில் எங்கள் புனிதமக்காவின் பண்போ மிகச் சிறந்தது.

நாங்கள் பாடசாலை விடுமுறை நாட்களில் கிளிநொச்சிக்குச் செல்வது வழக்கம். அங்கு சென்றால் வீட்டின் பின்பக்கத்தில் ஒரு சாய்விலே நெல் குவியலாகக் குவிக்கப்பட்டிருப்பதும், அதற்குள் பழுக்க வைத்த மாம்பழங்களைக் கிளறியெடுத்துண்பதும் இன்னும் நினைவில் நிற்கும் காட்சிகளாகும்.

அல்வாயிலிருந்து சென்று கிளிநொச்சியை வாழ்விடமாக்கிக் கொண்டபின்னர் அங்குள்ள பொது நிறுவனங்களின் வளர்ச்சியில் அமரர் புனிதமக்காவினதும் அவரது கணவர் அமரர் மகேசன் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களினதும் பங்கு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. தங்களூர்ப் பாடசாலை, கோயில் என்பவற்றின் வளர்ச்சியில் அவர்கள் மிகுந்த கரிசனை எடுத்துச் செயற்பட்டதைப் பார்க்க முடிகிறது. அதுபோலவே பிள்ளைகளும் கல்வி அறிவு மேன்மைப்பட்டு தமது தொழில் நிறுவனங்களைச் சிறப்பாக வழிநடாத்திச் செல்வது மட்டுமன்றி தமது சூழலில் உள்ள கோயில் போன்ற பொது நிறுவனங்களின் நிர்வாகங்களிலிருந்தும் சிறப்பாகப் பணியாற்றி வருவதைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடிகிறது. இவையெல்லாம் அவர்களின் பிறப்போடு சேர்த்து பிறந்து கொண்ட விடயங்களாகும்.

அமரர் புனிதமக்கா மிகுந்த ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். தேவார பதிகங்களைப் பண்போடு பாடும் ஆற்றல் பெற்றவர். எப்பொழுதும் இறைவனை உள்ளன்பு கொண்டு வழிபட்டு வருபவர்.

கிளிநொச்சிக்கு நாம் சென்ற வேளைகளில் இடவித்தியாசத்தினால் வருத்தம் ஏதாவது ஏற்பட்டால், அருகில் உள்ள கோயிலுக்கு அழைத்துச் சென்று பூசகரைக் கொண்டு விபூதி போட்டு விடுவார். அவ் விபூதியுடன் வருத்தம் தானாகவே மறைந்துவிடும். இது எவ்வாறு நிகழுகிறது என நான் எண்ணிப் பார்த்ததுண்டு. பின்னர்தான் விளங்கிக் கொண்டேன். இறைவன் மீது அவருக்கிருந்த உண்மையான பக்தியும், நம்பிக்கையுமே இது நிகழக் காரணமென்று.

இறுதியாக, ஒரு மாதத்திற்கு முன்னர் எனது மருமகன் ஐங்கரனின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எமது வீட்டிற்கு வந்திருந்தார். அப்பொழுது "அம்மாவை ஒருக்கால் கிளிநொச்சிக்குக் கொண்டு வந்து விடுதம்பி ஒரு கிழமை அங்கே நிக்கட்டும். கிளிநொச்சியில் எல்லா இடத்தையும் பார்க்கட்டும்" என்று கேட்டிருந்தார். நானும் சித்திரை மாத விடுமுறைக்கு வருவதாகக் கூறியிருந்தேன்.

இப்படியாக இருக்கையில் அன்று வியாழக்கிழமை பாடசாலைக்குப் புறப்பட ஆயத்தமான போது அதிர்ச்சி தரும் அந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது.

ஒன்றை மட்டும் எண்ணினேன். ஆன்மீக ஈடுபாடும், இறைவன் மீது கொண்ட உண்மையான பக்தியும் அவருக்கு எந்தவிதமான துன்பமான அறிகுறியையும் காட்டாது இறைவன் தன்னுடன் இணைத்துக் கொண்டு விட்டார் என்று.

**இதுவே அவரது ஆன்மீக வாழ்வு.**


**அன்புத்தம்பி**

**க.மு.இராஜவரோதயம் ( ஞானி )**

**அதிபர்.**

**யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்**

**அச்சுவேலி.**

**யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகனின் பட்டமளிப்பு நிகழ்வின் போது.....



மகனின் முதுமாணிப் பட்டமளிப்பு நிகழ்வின் போது.....

கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்
தரம் 5 புலமைப் பரிசில் பாராட்டு விழா–2012




தன் பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்கப்படுத்தும் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவரை நானிலத்தில் நான் கண்டேன்

இவர் யார்? என்ற கேள்வி எல்லோருக்குமே இருப்பதை உணர்கிறோம். பிறந்த இடம், இருந்த இடம், வாழ்ந்த இடம், எப்படிப்பட்டவர் என்பதெல்லாம் இற்றைவரை கேள்வியே. மனிதர்கள் வாழ்ந்த பின் இறக்கின்றார்கள். மாமனிதர்கள் இறந்த பின் வாழ்கின்றார்கள் அவர்களில் ஒருவரே புனிதவதி அம்மையர்.

வாழ்வியலின் பல கேள்விகளுக்கு விடை கொடுத்திருக்கின்றார் இவர் இல்லற வாழ்வில் எதிர்பார்ப்புக்கள் இருப்பதுதான் ஆனால் இவர் எதை எதிர்பார்த்தார்? இவருக்கு ஏன் கோபம் வருவதில்லை? இவர் ஏன் உணர்ச்சி வசப்படுவதில்லை? இவர் ஏன் மற்றவர்களை விமர்சிப்பதில்லை? நன்மை தீமைகளில் உரிமையோடு பங்களிக்கும் பாங்கு மிக அற்புதமானது இவருக்கு கோபக்காரர்களே இல்லையா?

மலர்ந்த முகம், இன்முகத்தோடு வரவேற்கும் சுபாவம், ஆள்பாதி ஆடைபாதி என அமைப்பாக ஆடை அணியும் அமைப்பு எப்போதும் hand bag. தோல் செருப்பு, ஆடம்பரமில்லாது ஆபரணம் அணியும் தன்மை புதுமைப்பெண் என்று சொல்வதா?

கலைமகள் வளர்த்த மூதறிஞர்களில் ஒருவர் மகேசன் மாஸ்ரர் நல்லாசானாய் மட்டுமல்ல, நல்ல நண்பனாக, இளைஞர்களின் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர் தான் மகேசன் மாஸ்ரர். தன் கணவனின் மனதுக்க நிறைந்த மனைவியாய் வாழ்ந்து அழகான, அறிவான, பண்பான மழலைகளை பெற்றெடுத்து இல்லற வாழ்வில் பெருமிதம் அடைந்து நின்றனர் மகேசன் மாஸ்ரரும, புனிதவதி அம்மையும்.

யார் இவர் என்ற கேள்விக்கு பதில் தந்து கண்ணிமைக்கும் நேரத்தில் காலனவன் கவர்ந்தெடுத்தான். மணந்தரும் மலர்கள் நிறைந்த தோட்டத்தில் மலரொன்று பறித்தெடுக்கப்பட்ட கவலை எமை வாட்டினாலும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்று மனதை தேற்றி வாழ்ந்திடுவோமே....

மனிதர்கள் வாழ்ந்த பின் இறக்கின்றனர்
மாமனிதர்கள் இறந்த பின் வாழ்கின்றனர்.

நன்றி

கல்விசார் சமூகத்தின் மிளிரும் நட்சத்திரமாக
கலைமகளின் கல்வெட்டில் பதிவாகி
மிளிர்ந்து கொண்டிருப்பவர் மகேசன் மாஸ்ரர்

**திரு.இராசையா மதிகரன்**
**முன்னாள் தலைவர்**
**ஸ்ரீ. கலைமகள் சனசமூகநிலையம்**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவதி அன்னைக்கு என் புஸ்பாஞ்சலி!

குடும்பத்தினரையும் உற்றார், உறவினரையும் ஆறாத் துயரில் ஆழத்திவிட்டு இறைவன் திருவடியில் மீளாத்துயில் கொண்ட அன்னையே பெயருக்கு ஏற்றாப் புறம் சொல் கேளாது புனிதமாக வாழ்ந்து பெரும்பேறு பெற்ற உங்களுக்கு இதயத்தால் என் புஸ்பாஞ்சலி !

நல்ல மகளாக, மனைவியாக ஏழு இன்ப சுரங்களைப் பெற்றெடுத்த அன்புத் தாயாக, அரவணைப்பின் சிகரமாக, உற்றார்க்கும் உறவினர்க்கும் உறுதுணையின் தூணாக, ஊராரின் மரியாதையில் இமயமாக உயர்ந்து நின்ற அன்னைக்கு என் புஸ்பாஞ்சலி !

கள்ளம் கபடமில்லா வெள்ளைச் சிரிப்பின் - விருட்சமே உன் நிழலில் இளைப்பாறி - ஓய்வெடுத்தவர்கள் எத்தனையோபேர், அதிலும் உன் சூட்டில் குளிர்காய ஓடி வரும் வனிதைக்கு உனக்கீடாக இனி யாருமில்லை. இவ்வுலகில், எல்லோரையும் உயிரினும் மேலாக நேசித்த அன்னைக்கு என் புஸ்பாஞ்சலி !

ஊர் புகழும் குருவாக அறிவுக்கு ஆசானாக உயர்ந்த உன் துணைவனை கணவனே என் கண்கண்ட தெய்வம் என்று இல்லறம் கண்டு நல்லறம் காத்து ஈடு இணையில்லாத எங்கள் இந்துமத பண்பாட்டில் ஈன்றெடுத்த பிள்ளைகட்கு இலக்கியமணம் கமழும் இன்பத்தமிழ் பெயர் சூட்டி மகிழ்ந்திட்ட தாயே என் புஸ்பாஞ்சலி !

அன்னேயே உன் இறுதி வழிப்பயணத்தில் வழயனுப்ப வந்த அலைமோதும் மக்கள் கூட்டம் எந்தவொரு மரணச்சடங்கிலும் நான் இதற்கு முன் கண்டதில்லை. அத்தனை பேரும் உன்னால் அரவணைக்கப்பட்டவர்கள் என்பதை இரங்கல் உரைகள் மூலம் உணர்ந்து கொண்டேன் என்றும் என் உள்ளத்தில் உயர்ந்து நிற்கும் அன்னைக்கு என் புஸ்பாஞ்சலி !

"செல்விருந்(து) ஓம்பி வருவருந்து பார்த்திருப்பன்
நல்விருந்து வானத்தவர்க்கு"

என்பது போல் மேல் உலகில் தேவர்களால் உபசரிக்கப்பட்டு உன் ஆத்மா சுவர்க்கத்தை அடைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டு என் இறுதி அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

எனக்கு இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய கேசவன் - வனிதை (றோகினி) தம்பதியருக்கு என் நன்றி.

**க.கனகசிங்கம்**
**இலிங்கநகர்**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமியின் நினைவாக...

எங்கள் திருமணத்துக்கு முன் மாமி உட்பட யசோவின் குடும்ப அங்கத்தவர்களோடு நேரடி பழக்கமில்லை. எமது திருமணத்தின் பின் ஓரிரு நாள் வவுனியாவுக்கு வந்து என்னோடு மாமாவும் மாமியும் தொலைபேசி வாயிலாக அறிமுகம் ஆகிக் கொண்டார்கள். மாமி கதைக்கும் போது மிகவும் செல்லமாகவே கதைத்தார். இதன்பின்னர் இடையிடையே வவுனியா வரும் போது எம்முடன் கதைத்துக் கொண்டார். ஒருசில வருடங்களின் பின்னர் மாமா மாமி இருவரையும் சுவிசுக்கு அழைத்து நேரடியாகப் பேசி மகிழும் எண்ணம் ஏற்பட உடனே களமிறங்கினோம். ஆனால் துரதிஸ்டவசமாக மாமாவின் சுகவீனத்தால் அவர் வரமுடியாத நிலை ஏற்பட மாமி மாத்திரம் 2008ம் ஆண்டு எம்மிடம் வந்தார். சுவிற்சிலாந்தின் விமான நிலையத்தை வந்தடைச்த போது நேரடியாக அறிமுகமாகிக் கொண்டார். மிகவும் அன்பான மனிதராகக் காணப்பட்ட அவரோடு எமது பிள்ளைகளும் மிக அன்போடு பழகிக் கொண்டார்கள்.

ஆரம்பத்தில் ஓரிரு நாட்கள் மாமி மருமகன் என்கின்ற மரியாதை இடைவெளியோடு நகர்ந்த எமது சுமாரான பழக்கம், என்னுடைய அன்னியோன்யமாகப் பழகும் தன்மையால் மாற்றம் பெற்று இருவரும் அன்னியோன்யமானோம். இதன் பின்னர் இருவரும் நீண்ட நேரம் சுவாரஸ்யமாகக் கதைப்போம். மாமியை சுவிற்சலாந்தில் கோடை காலத்தில் அழைத்தால். பல பார்க்கக்கூடிய இடங்களை கூட்டிச் சென்று காட்டினேம். மிகவும் ஆசை ஆசையாய் இடங்களை ரசித்து மகிழ்வர். ஆனாலும் பூமிப்பந்திலுள்ள சொற்கமாக இருக்கக் கூடிய சுவிற்சலாந்து நாட்டின் அழகான இடங்களை ரசிப்பதில் காட்டும் நாட்டத்தைவிட சுவிற்சலாந்து நாட்டில் வாழும் தனது உறவினரைச் சந்தித்துக் கதைப்பதில் தான் அதிக ஆர்வம் காட்டினார். "சந்ரா என்னை இவையளிட்ட கூட்டிக் கொண்டு போங்கோ அவையளிட்டை கூட்டிக்கொண்டு போங்போ" என்று பலரது பெயர்களைக் குறிப்பிட்டுக் கேட்பார். ஐரோப்பாவின் இயந்திர மயமான வாழ்க்கை முறையில் சுவிசிலுள்ள அத்தனை உறவுகளின் வீடுகளுக்கும் அழைத்துச் செல்வதற்கு அவருக்கு வழங்கப்பட்ட விசாக்காலமான மூன்று மாதங்கள் போதாது. ஆனால் அவரது அதிஸ்டமோ என்னவோ அவர் சுவிசில் நின்ற அந்த மூன்றுமாத காலத்தில் திருமணம், பூப்புனிதநீராட்டு விழா, பிறந்த நாள்விழா என எமது உறவுகளின் பல வைபவங்கள் நடந்தன. "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல" என்னும் வசனம் போல சந்திக்க வேண்டிய அத்தனை உறவுகளும் அடுத்தடுத்து வைபவங்களுக்கு வந்தனர். உறவுகளோடு அவர் உரையாடும் போது அவரது முகத்தில் தென்படும் பூரிப்பை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அந்த அளவுக்கு உறவுகளை நேசித்தார். அனேகமாக சுவிசிலுள்ள அனைத்து உறவுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கதைத்த திருப்தி அவருக்க் கிடைத்தது. சமகாலத்தில் இயலக்கூடிய அளவு அழகான இடங்களையும் பார்த்து ரசித்தார்.

மாமி நாடு திரும்புவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்பு ஒருநாள் என்னைப்பார்த்து "சந்திரா! எனக்கு உங்களில் எல்லா விடயமும் நல்லாப் பிடுச்சுது. ஆனால் ஒரு விடயத்தில் திருப்தி இல்லை" என்றார். "நீங்கள் பெரிய அளவில கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போகவில்லை. எனக்கு கோயில் என்றால் நல்ல விருப்பம்" என்றார். அவர் மிகுந்த கடவுள் பக்தி உள்ளவர். இங்கிருநத நாட்களில் அதிகாலை எழுந்து பஜனைப் பாடல்கள் எல்லாம் பாடுவார். கோயிலுக்கு கூட்டிச் சென்ற சந்தர்ப்பங்களெல்லாம் பஜனைப் பாடல்கள் பாடுவது. தேவாரம் பாடுவது என தனது பக்தியை வெளிப்படுத்தியதைக் கண்டேன். நான் முதலில் கூறியது போல ஐரோப்பாவின் வேலைப்பளுக்களால் அவரது ஆசைப்படி வாராவாரம் கோயிலுக்கு அழைத்துச் செல்லாதது இப்போது அவரது மறைவின் பின் மனதை வாட்டுகிறது.

மாமி எம்முடனிருந்த போது நான், அழகிய பசுமையான காட்சிகளோடும் பூக்களோடும் சேர்ந்து தன்னைப் படமாகப் பதிவு செய்வதை மிகவும் விரும்பினார். இதன்படி அவர் நாடு திரும்புவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன், தான் மிகவும் விரும்பி ரசித்த ஒரு அப்பிள் மரச் சோலைக்குள் வைத்து தன்னைப் படம் எடுக்குமாறு ஆசையோடு கேட்டார். நானும் உடனே ஆம் என்றேன். எமது இருப்பிடத்தின் மிக அருகிலே தான் அவர் விரும்பிக் கேட்ட அந்த அழகிய காட்சி இருந்தது. இதனால் எமது இருப்பிடத்திலிருந்து வெளியே செல்லும்போதெல்லாம் அந்தக் காட்சியைக் காண்போம். மாமியின் மரணச் செய்தி வந்த போது மனம் அதை நம்ப மறுத்தது. அது கனவாக இருக்காதா என எண்ணத் தோன்றியது. மரணச் செய்தி கேட்ட அன்று இருப்பிடத்தின் வெளியே சென்ற போது அவரோடு சேர்ந்து அப்பிள் பழச் சோலைக்குள் பதிவாகிய படங்களும் அதற்காக அவர் நின்ற விதவிதமானகோணங்களும் மனத்திரையில் படமாக ஓடியது. உள்மனம் ஓவென்று அழுது விட்டது. மாமியை இனி என்றுமே காண மாட்டோமே என்ற வேதனை வாட்டியது. சிறிது நேரத்தில் என்னைச் சுதாகரித்துக கொண்டேன். ஓவென்று அழுத அதே உள்மனம் ஆறுதல் கூறியது. ஆம்.....மாமி எம்மை விட்டு மறையவில்லை. அவர் சுவிசிலே எம்முடன் நின்ற அந்த 90 நாட்களும் அவர் சென்ற, இருந்த, நடந்த அத்தனை இடங்களைப் பார்த்தாலும் அவர் அங்கு வாழ்வதாகவே தெரிகிறது. அவர் இறக்கவில்லை. வாழ்கிறார். எம்மோடு வாழ்கிறார். உங்கள் இதயங்கள்ல் வாழ்கிறார். அவர் அன்போடு நேசித்த அவரது பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் என அனைவரது உள்ளத்திலும் வாழ்கிறார்.

**அன்போடு**

**மருமகன் மு.சந்திரகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கட அப்பம்மாவே....!

சந்தோஷம் ததும்ப சங்கீத் என சங்கீதம்
இசைத்திடும் என் அப்பம்மாவே!
ஆறலையே தேறலையே கங்கை நதி வற்றிடும்
என் கணண்ணீர் நதி வற்றலையே!
"அ" எனும் அரிச்சுவடி சொல்லித் தந்த அப்பம்மாவே!
உந்தனுக்கு கவி வடிக்க முயல்கிறேன் முடியவில்லை
கண்ணீரே மையானது
தை பிறக்க வழி பிறக்கும் இது சான்றோர் வாக்கு
நமக்கு வழிபிறக்கவில்லை வலி பிறந்தது இது என் கூற்று
நம் கல்விக்கூடம் தன் வைரவிழாக் காண்கையில்
அப்பப்பாவின் கௌரவம் நுமைச் சார களிப்புடன்
வீற்றிருந்தீர் கள்விக் குழாமின் ஒருத்தியாய் - கண்ணுற்றேன்
வருந்ததே அன்று ஆனந்தக் கண்ணீர் - வருகிறதே
இன்று துயரக்கண்ணீர் - நீவிர்
தடம் பதித்த தடம் இன்னும் அழியவில்லை
தடம் பதிக்க நும் பாதம் இன்று இங்கில்லை.
தடங்களை நினைக்கையில்
தாங்கிட மறுக்கிறது - என் இதயம் நும் பிரிவை
அப்பம்மாவே! மறைத்ததன் மாயம் தான்
என்னவோ?
சஞ்சி என செல்லமாய் சீண்டிடும் அப்பம்மாவே!
கடல் கடந்து சென்றிருந்தால் கதைத்திருப்பேன்
முகம் பார்த்து கதைக்கும் முகவரியின் - நீவிரோ
சென்ற இடம் சொல்லவில்லை சேய்கள் நாம்
அழுகின்றோம் - அழுகுரல்கள் கேட்கலையா?
இவ் அவனி என்ன பிடிக்கலையா?
புத்தாண்டு பிறந்துவோ புதுமலர்ச்சி கண்டுடிவீர்
தந்தையுடன் வீடு வர வாசல் வந்து அழைத்திடுவீர்.
சிற்றுண்டி தனைத் தந்து சிரிக்க எமை வைத்திடுவீர்
மாரி அம்மன் கோவில் வந்தான் மறக்காமல் வந்திடுவீர் எம்மடிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடி அணைக்க அப்பம்மா இல்லை வந்திடுவீா்
மறுபடியும் எம்மடிக்கு
கதறி நான் அழுகிறேன் காதோரம் கேட்கலையா
பல்கலை நான் கற்று பாராட்டுப் பெற்றிட
பாா்த்திருப்பீா் என்றிருக்க பாதியிலே போனதன்
நியாயம் தான் என்னவோ?
முகம் பாா்க்க துடிக்கிறேன் முகவரியோ!
சொல்லவில்லை!

**பேரப்பிள்ளைகள்**
**சங்கீத், சஞ்சிகா**

## முகநூல் ஊடாக...

இன்னும் கனகாலம் வாழ்ந்திருக்கலாம் எங்கள் புனிதக்கா. எப்பொழுதுமே மனதால் நிறைவாய் வாழ்ந்தவர். எந்தக் கஸ்ரத்தையும் பெரிது படுத்தாதவா். இன்று வரையில் இரு தடவைகள் தான் நான் கிளிநொச்சி போயிருக்கின்றேன். இரு தடவைகளிலும் அவவின் கையால் சாப்பிட்ட சாப்பாடு பல ஜென்மங்கள் சாப்பிட்டதற்கு சமம். அப்படி இருக்கும் அவர் எமக்கு உணவு பரிமாறும் பக்குவம். அடுப்படிக்குள் காலை நீட்டி வைத்துக் கொண்டு புட்டு அவிப்பதும், இடியப்பம் புளிவதும் இன்றும் என் கண் முன்னே நிற்கின்றது. எங்கள் குடும்பங்களில் ஒரு பழக்கம் இருந்தது. நாம் உறவு முறையில் மைத்துணர், மைத்துணிகளாக இருப்பினும் எங்கள் அன்பு எப்போதும் சகோதரத்துவம் கொண்டதாக இருந்தமையே. புனிதக்காவின் ஆத்மா சாந்தி பெற நாம் அனைவருமாய் பிரார்த்திப்போம்.

**மைத்துணி**
**அனுஷா**
**செல்வரத்தினம்**
**கனடா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை விடுமுறைக்காய்...

ஆனந்தமாய் விடுமுறையை
அம்மம்மா வீட்டில் கழித்திடவே
அப்பம்மா வீட்டிலிருந்து
அதிகாலை வேளையதில்
அவசரமாய் வெளிக்கிட்டு
ஆனந்தபுரம் வந்தவுடன்
ஆனந்தமாய் ஓடிச்சென்று
அம்மம்மாவின் முத்தமதை
அன்புடன் பெற்றுக் கொண்டு
அவர் அரவணைப்பில்
அக்கா தங்கையுடன்
அத்தான் மச்சியுடன்
கூடவே குட்டிமாமாவுடன்
குதுகலித்துக் கொண்டாடி
நாகதம்பிரானில்
நயனத்துடன் பாடல் பாடும்
அம்மம்மாவின் அழகு கண்டு
அமைதியாக ரசித்திருப்போம்.
விடுமுறை முடிந்து
வீடு திரும்புகையில்
கண்ணீர் மல்கி
காசு தந்து
அப்பா முதல் அம்மாவரை
அனைவருக்கும் அவரணியும் விபுதியை
வாயிலிட்டு
வழியனுப்பும்
அம்மம்மா எனியாருண்டு
ஆனந்தமாய்
ஆனந்தபுரம் வருவதற்கு.

பேரப்பிள்ளைகள்
அபிநயன் அக்சயன்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கட அம்மம்மாவே....!

செல்லமாய் சாரு என தினம் செப்பும் - ஓசையது
செவியோரம் இன்னமும் ஒலிக்கிறது
அன்னை தந்த வரம் -என் அம்மம்மாவே
வைகறை புலர்கையில் குட்டி மாயா குரல் வழியே
வந்ததே - காலன் அவன் கவர்ந்த செய்தி
நும் ஆசை முகம் காணாது துடிக்கின்றோம்
69வது அகவைக் கண்டு ஆசையுடன்
குதூகலித்தோம் ஒரு கூட்டுக்கிளிகளாய்
நாமிருந்த நாட்கள் அதன் நினைவலைகள்
நெஞ்சத்தை வருடுகிறது
முதல் பேத்தி என் ஜனனம் கண்டு மகிழ்ந்த
நாட்கள் - பள்ளி விடுமுறையில் பாசமுடன்
பகிர்ந்துண்ட அந்த நாட்கள்
என் பூப்புனித நன்நாளில் பாசமொழி
பகிர்ந்த நாட்கள் - அம்மம்மாவே
ஏட்டினில் எழுதிட ஏடு தான் போதிடுமோ?
அன்றில் தழிழ் அகராதி தான் போதிடுமோ?
சாந்தமாய் சாத்வி என அன்புமொழி பேசிடும்
அன்னையின் மறுவடிவம் அம்மம்மாவே!
ஆசையாய் ஒருமுறை நும் குரல் கேட்க
தவிக்கிறேன் அம்மம்மாவே!
குலதெய்வம் தனை நாடி நும் நாதம்
நம் செவி கேட்கும் காலம் தான் எப்போ?
பொய் ஆகிப் போகாதா? நும் மரணம்
மறு ஜனனம் காண்கையில்
மறுபடியும் அம்மம்மாவாய் -
இவ் அவனியின் வாழ்ந்திட வரம் ஒன்று கேட்கிறேன்
இறைவனிடம்.
பிரியமாய் லக்சி என பிரிவு காட்டும்
என் அம்மம்மாவே!
ஆசையாய் அழைக்கிறேன் நும் செவியோரம்
கேட்கலையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிஸ்லாந்தில் ஓர் சுற்றுலா-2008




சுவிஸ்லாந்தில் மூத்த மகள் குடும்பத்துடன்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேம்பி அழுகிறேன் தேசம் விட்டுப்
போனதேனோ? நல் உணவு சமைக்கையில்
நமை அழைத்த தொலைபேசி இன்று
ஓசை இழந்து போனதுவோ
ஒளிமயமான நம் வாழ்வு ஒளி இழந்து போனதுவோ
பேரூந்து பயணம் தனில் சிறுதூக்கம்
நான் கொள்ள மடி அணைத்த அந்த நாட்கள்
என் விழியோரம் நிழலாடுகிறது.
சௌக்கியம் எமக்களித்து சானு எனை
கடைக்குட்டி என கருணை
காட்டும் அம்மம்மாவே!
ஏங்கி எமை தவிக்கவிட்டு
சென்ற இடம் எங்கே?
காலன் அவன் கவர்ந்திட கடுகதியில் சென்றதேனோ?
கருவிழிகள் நீர் சொரிய கதறி
நான் அழுகிறேன்
கைபிடித்து நடை பழக்க
நிலாக் காட்டி சோறு ஊட்ட எனை
நித்திரைக்கு தாலாட்ட நிஷப்தப் பொழுதில்
கதை கூற ஒரு தரம் எம் அடிக்கு
வர மறுப்பதேனோ?

**பேரப்பிள்ளைகள்:**
**ஸாருகா,ஷாத்விகா,**
**லக்ஷிகா, ஷானுகா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வென்ற அன்னை

உண்மையில் இந்த இடத்தில் நாம் புனிதவதி அம்மையாரைப் பார்க்கின்றோம். எமது உள்ளங்களில் இருந்து விடைபெற்றுச் சென்றுள்ளார். பொதுவாக சொல்வார்கள் நூலைப் போல சேலை என்று அதேபோல் அமரரது பிள்ளைகளும் நல்ல நிலையில் இருப்பதோடு தாயின் பராமரிப்பு, வளர்க்கும் முறை. அவர்களை இந்த சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருப்பதற்கான முயற்சி போன்ற தாய்மையின் கடமைகளை ஆற்றியிருக்கின்றார்.

தாயின் சிறந்த குணங்களையும், தாயின் தியாகத்தையும், பிள்ளைகளை வளர்ந்தெடுக்கும் பாங்கையும் பெற்றிருக்கின்றார் என்பதை இந்த இடத்திலே நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

நான் இந்தப் பிரதேசத்திற்கு குறுகிய காலத்திலேயே கடமைக்காக வந்திருந்தேன். என்னுடன் நெருங்கிய சகோதரர் ஆகவும், நெருங்கிய நண்பராகவும் பத்மசங்கர் அவர்கள் இருந்து வருகின்றார்கள். இவ்வேளையில் நான் அவருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. தாய் என்றால் யார்? என்பதையும் அவரின் குணங்களையும் அறிந்து கொண்டதுடன் இப்பிரதேசத்திற்குரிய ஒரு உன்னதமான சாயங்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

நான் சுகவீனமாக கிளிநொச்சி மருத்துவ மனையில் இருந்தபோது என்னை முதல் தடவையாக பார்வையற்ற பத்மசங்கர் தனது அம்மாவின் மூலம் ஒவ்வொரு நாளும் மரக்கறி சூப் செய்து வழங்கினார். இந்த அம்மாவின் சூப்பையே நான் உணவாக உட்கொண்டேன். இந்த இடத்தில் அவரை நான் வணங்குகின்றேன்.

எனவே இந்த நிலையை நாம் எல்லோரும் அடையத்தான் போகின்றோம். நாம் பிறந்த அன்றில் இருந்து நாம் மரணிப்பது நிச்சயயம். ஆனால் நேரம் காலம் தெரியாது. அவ்வகையில் இன்று அமரர் புனிதவதி அவர்கள் இருக்கின்றார்கள். இந்தப் பயணம் போன்று நாம் என்றோ ஒருநாள் சந்திக்கத் தான் போகின்றோம். அதற்காக நாங்கள் புனிதவதி அம்மாவின் வழிகாட்டல்கள் போன்று, அவருடைய நெறிப்படுத்தலைப் போன்று, அவரது குணங்களைப் போன்று, அவர் பிள்ளைகளை எப்படி வளர்த்தெடுக்கின்றார். அதுபோன்று அவரது பின்பற்றல்களை பின்பற்றும் ஒரு நாளாகத்தான் இன்றைய நாளில் நாம் கலந்து கொண்டிருக்கின்றோம்.

அமரர் ஆற்றிய சேவைக்காகவும், இந்த சமூகத்தின் முன் மாதிரியான ஒரு அம்மையாகவும் நான் பார்க்கின்றேன். அமரரின் பிள்ளைகள் அனைவருடனும் நான் நன்கு பழகியிருக்கின்றேன். அவற்றுக்கும் இந்தத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இருந்திருக்கின்றார்.

அமரரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் ஜனத்திரளை நாம் பார்த்த போது இந்த அம்மாவின் உண்மை நிலையை அறிய முடிந்தது. எனவே இந்த அம்மையின் வழிகாட்டலை நாம் பின்பற்றி வாழ வேண்டும் எனக் கூறி, அம்மையின் ஆன்மா சாந்தி பெற வேண்டி நிற்கின்றேன்.

**M.L. அரிப்டீன்**
**மாவட்ட பொதுமக்கள்**
**தொடர்பாடல் பொலிஸ் பிரிவு**
**பொலிஸ் நிலையம்**
**கிளிநொச்சி**

## மகத்தான மனிதர்களின் நினைவுகள் என்றும் அழியாதவை

மனதிலும் நினைவிலும் நீங்காது நின்று எம்மை வழிநடாத்தும் இத்தகைய நினைவின் சிறப்பிற்குரியவர் திருமதி மகேசன் புனிதவதி அவர்கள். இவர் தன்னுடைய சிறந்த பண்பு, தளராத அன்பு, பாசம் என்பவற்றால் சிறந்த குடும்பத் தலைவியாக சிறந்து விளங்கினார். இத்தகைய நற்பண்புகளால் முன்மாதிரியாக செயற்பட்டார். இவர் நல்ல அம்மாவாக, தோழியாக, சமூக சேவகியாக என நீங்காத இடத்தைப் பிடித்தார்.

அமரர். திருமதி மகேசன் புனிதவதி அவர்களின் சிறந்த வாழ்வின் அடையாளமாக அவருடைய பிள்ளைகள் இன்று சமூகத்தில் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். பிள்ளைகளின் நற்பண்பு, நற்செயல், சிறப்புக்களை பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கின்றேன். இதற்கு காரணம் அம்மையார் அவர்களே. நல்ல மனம் படைத்து சிறந்து விளங்கிய வாழ்வின் வழிகாட்டி திருமதி மகேசன் புனிதவதி அவர்களின் நினைவுகளை என்றென்றும் போற்றுகின்றேன்.

**பரமசாமி இராமச்சந்திரன்**
**பிரதேசசபை உறுப்பினர்**
**கரைச்சி,**
**கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மாமன் தவமிருந்து பெற்றெடுத்த தகைசார் பேரெழில்!

என்றும் எம்மை ஆரத் தழுவித் தனது அன்பான அணைப்பினாலும், கள்ளமற்ற வெள்ளை உள்ளத்துப் பேச்சினாலும் எம்மை ஆட்கொண்ட, எனது தாய் மாமனார் தவமிருந்து பெற்றெடுத்த எங்கள் அக்காவை, இன்று நான் மட்டுமல்ல, நன்றி பேணும் இந்த வன்னி மண்ணும் இழந்து தவிக்கிறது. அவருக்கும் எனக்குமிடையில் உள்ள அன்பானது ஆழமானது, உன்னதமானது, அளவிட முடியாதது. அதனை விபரிக்க என்னிடம் வார்த்தைகளே இல்லை. அத்தனை நிகழ்ச்சிகள்? அத்தனையும் என் மனத்திரையில் பல்வேறு காட்சிகளாக விரிந்து பரந்து நிற்கின்றன. இனிமேல் எங்கே காண்பது? விரைவில் ஊர் சென்று அனைவரையும் பார்த்து வரவேண்டுமென எண்ணியிருந்தேன். எனது தாயாரின் சாயலிற் திளைத்திருந்த எனது மாமனார் மகளைக் காண்பதன் மூலம், என்னைப் பெற்றவளைத் தரிசிப்பது போன்ற உணர்வில் ஆறுதலடையலாம் என்று எண்ணியிருந்த வாய்ப்பினையும் இழந்துவிட்டேன். எத்தகைய ஏமாற்றம்? இறைவன் தனக்குப் பிரியமானவர்களையே தேர்ந்தெடுத்துத் தன்னோடு அனைத்துக் கொள்கின்றான் என்பது இவர் விடயத்தில் நிரூபணமாகிறது.

அக்காவின் திருவுருவப் படத்தைப் பார்த்தவாறே கண்களில் நீர் கசிய எனது எழுத்தைத் தொடர்கிறேன். "சின்னக்கா" என்று ஆசையுடன் அழைக்கும் தனது மாமியாராகிய எனது அன்னையின் அகவையை ஒத்த காலப் பகுதியிலேயே அவரைப் போன்றே மாரடைப்பினால் திடீர் மறைவெய்தியுள்ளார். இவரது பிரிவானது பெருந்துயரினை எமக்களித்தாலும், இறையுலகில் தனக்கு வேண்டிய அத்தனை பேருடனும் (எனது இளவல் வெல்வன் பிரின்ஸ் கோமகனும் இவர்களுள் அடக்கம்) இணைந்து வீட்டின்பப் பேற்றினைத் துய்த்து இன்புறுவார் என்னும் எண்ணத்தில் ஆறுதலடைவோமாக!

தலைநகரிலிருந்து இவரது இறுதி ஊர்வலத்திற் கலந்துகொண்ட என் தம்பி ஞானதாஸ், இந்நிகழ்ச்சி பற்றியும் அங்கே தனக்கேற்பட்ட உணர்வினையும் தனது முகநூலில் மிகவும் நேர்த்தியாகச் சிறு குறிப்பாக எழுதியிருந்தார். சம்பிரதாயங்கள், உறவுமுறைகளைத் தாண்டி தோரண, இரங்கல் உரை, வெடி எனப் பல தரப்பட்ட வெளிப்பாடுகளின் நிமித்தம் அங்கே ஏற்பட்ட உணர்வுகளையும், உறவினர்கள் கொண்ட புத்துணர்ச்சி பற்றியும் விபரித்ததுடன், அதுவரை அனல் நிலமாயக் காட்சியளித்த அந்தப் புனிதபூமி, ஊர்வலம் தெருவில் இறங்கியதுதான் தாமதம் வானம் பொழிந்த மழைத்தூறலினால் குளிர்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து புனிதவதியானவர் இவ்வுலகில் விட்டுச்சென்ற புண்ணியப் பேற்றின் பலனே எனவும் மறைமுகமாகக் கூறியிருந்தார்.

எப்படியெல்லாம் இந்த இறுதியாத்திரை நடக்குமென எதிர் பார்த்தேனோ அப்படியேதான் நடந்து முடிந்திருக்கிறது. இதற்குக் காரணம் இவ்வுலக நீரோட்டத்தில் இவர் பயணித்த வாழ்வியல் முறையேயாகும். இச்சிறப்பானது இன்று நேற்று உருவானது அல்ல. பிறப்போடு திருவாக இசைந்து வந்ததே.. அன்பும் பண்பும் நிறைந்த கடுமையான உழைப்பாளிகளான பெற்றோர், பாசத்தோடும், பரிவோடும் உறவாடிய நான்கு சகோதரர்கள், குடும்பத்தில் ஒரேயொரு பெண்பிள்ளையாகத் தோன்றிய வாய்ப்பு என இன்னோரன்ன பல காரணங்களாகும். மேலும், இவரது மணவாழ்வு இதில் இவருக்கு மிகப்பெரும் கொடையெனக் கிடைத்த, புரிந்துணர்வும், தலைமைத்துவப் பண்புகளும், கனிந்த உள்ளமும் படைத்த துணைவர் அத்துடன் இறையருளாற் பெறப்பெற்ற நன்மக்கட்பேறு.

"மங்கலம் என்ப மனைமாட்சி, மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கள் பேறு"

அனைத்தலகம் மேலாக இவரிடம் மேலோங்கி நின்ற நங்கையருக்கான நற்பண்புகள், தகைசார் இல்லறமாணப்பு, ஈடில்லா விருந்தோம்பல், ஏற்றத் தாழ்வின்றி அனைவருடனும் அன்பு பாராட்டிப் பழகும் பிறந்தகத்தப் பண்பு என மேலும் பல சிறந்த இயல்பான குணாம்சங்களும், அவற்றின் நிமித்தம் அந்த வன்னி மக்களைக் கவர்ந்து வாழ்ந்து வந்த, பண்பாட்டு விழுமியங்களின் வெளிபாடுகளே, அவரின் இறுதி ஊர்வலம் இவ்வாறான சிறப்புமிக்க நிகழ்ச்சியாக நிறைவேற வழிவகுத்தது.

இறுதி ஊர்வலம் மட்டுமல்ல, எமது ஊரிலேயே மிகப் பிரமாண்டமான திருமண ஊர்வலத்தோடு தனது மணவாழ்விற் காலடி பதித்த பெண்மணியவர். வாழைமரங்கள், இளந்தென்னை மரங்கள், தென்னையிலை, மாவிலைப் பந்தல், அரச பரம்பரைக்குரிய மணமேடை, வீட்டு முற்றத்திலிருந்து தெருவரைக்கும் இதே அலங்கரிப்பிற் திகழ்ந்த அழகு - இவற்றையெல்லாம் உள்ளடக்கிய நாமெல்லாம் சுவடு பதித்த தகனையம்பதியிலேயே இந்த விழா நடந்தேறியது. பெண் வீட்டிலிருந்து மணமகள் வீடுவரை வீதிகள் யாவும் இதே தோரணங்களினாலும், வாழை, தென்னை மரங்களினாலும் நிரம்பி வழிந்தது. இவை யாவும் இவரது தந்தையாராலும், அண்ணன்மாரினாலும் கிளிநொச்சியிலிருந்து லொறி மூலம் தருவிக்கப்பட்டவையே. மேள, தாள வாத்தியங்களுக்கோ குறைவில்லை. வீட்டின் பின்புறம் சாப்பாட்டுப் பந்தல்களால் நிறைந்திருந்தது. சுவைமிக்க இனிப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாங்கள்! நான் எனது வாழ்க்கையில் முதன் முதலாகக் கண்டு களித்த வரலாற்றுப் புகழ் மிக்க திருமண நிகழ்ச்சியிது. எனக்கு அப்போது அகவை கிட்டத்தட்ட ஒன்பது இருக்கலாம்.

பிறப்பிலிருந்து இறுதியரை ஒரே மாதியான சிறப்புக்களும், இருவகை உன்னதமான ஊர்வலங்களும் வாழ்வில் ஒருங்கே அமைவது எல்லோருக்கும் வாய்ப்பதல்ல.

காடு வெட்டிக் களனியாக மாறிய கிளிநொச்சி, உருத்திரபுரத்தைத் தனது வாழ்விடமாக அமைத்துக் கொண்ட எனது மாமனார், தனது பிள்ளைகளை மிகவும் அன்பு நிறைந்த கட்டுப்பாட்டின் கீழேயே வளர்த்து வந்தார். எமது குடும்பத்தின் மரபுவழிப் பெயராக இலங்கிய, எங்கள் பாட்டியின் "மயிலாவதி" என்னும் பெயரின் வழிமுறையாகச் சூட்டப்பட்ட கமலாவதி, இந்திராவதி, சிவஞானவதி என்பவற்றைத் தொடர்ந்து இவருக்கும் "புனிதவதி" என்னும் நாமம் எனது மாமன்மார்களினாற் சூட்டப்பட்டது. இவ்வண்ணம் வாழ்ந்து வரும் வேளையில் எமது கிராமமான அல்வாய்க்குத் தன் மகளை அழைத்து வருவதாயின் மோட்டார் வாகனமொன்றை ஒழுங்கு செய்து அதன் மூலமே பயணிப்பர். பஸ் பயணம் என்பதை எங்கள் அக்கா ஒரு பொழுதும் அறிந்திருக்கவில்லை. "பயணத்தின் போது மற்றவர்கள் இவர் மீது முட்டிவிடக் கூடாது' என்னும் தந்தையாரின அக்கறைதான் காரணம் என அறிவுவந்த காலத்தில் நானும் தெரிந்து கொண்டேன். பெயருக்கேற்ற புனிதம்! சின்னத்தம்பி திரைப்படம் பார்க்கும்தோறும் நடிகை குஷ்புவின் பாத்திரம் எங்கள் அக்காவையே கண்முன் கொண்டுவரும்.

எங்கள் வீட்டிற்கு அக்கா வரவிருப்பதை அறியும்போது என்மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கும். இவருடனேயே எனது காலம் கழியும் இவ்வாறுதான் திருமணத்தின் போதும் எங்கள் வீட்டிலேயே தங்கியிருந்த பொழுதுகள் மிக இனிமையானவை. மணித் துளிக்கொரு தடவை எனது தாயாரைச் 'சின்னக்கா' என்றும் தந்தையாரை மிகவும் அன்போடு 'மாமா' எனவும் அழைத்து அவர்கள் பின்னால் சுற்றிச் சுற்றி வருவார். எனது அப்பாவுக்கோ எங்கள் புனிதக்காவில் கொள்ளை அன்பு, காரணம் அவரது அக்கா ஒருவரே இப் புனிதத்தை ஈன்றவர். நன்கு செழித்துத் தழைத்துப் பூரிதுப் போயிருக்கும் தனது மருகியின் இயற்கை அழகுத் தோற்றத்தில் மகிழ்ந்து, அதனை என் முன்னிலையில் எடுத்துக் கூறிப் பெருமைப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

இவ்வாறே அவருக்கு வாய்த்த இணையனும் எங்கள் மிக நெங்கிய உறவினனே. அக்காவை அடைவதற்கு முன்பே எங்கள் குடும்பத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராக விளங்கியவர். எனக்கு வாய்த்த அன்பான அண்ணர். இவரும் இன்று எம்மத்தியில் இல்லை. தான் பிறந்த, வாழ்ந்த அழகு பதிகளான அல்வாய், கிளிநொச்சி வாழ் மக்களுக்கு அரும்பெரும் பணிகளாற்றி ஆண்டவன் திருப்பாதம் அடைந்தவர்.

தனது இல்லக் கிழத்தியை விட்டுப் பிரிந்து வானுலகில் தனித்த வாழ முடியாது போய்விடவே அவரைத் தன்பால் எடுத்துக் கொண்டாரே என்றும் எண்ணத் தோன்றுகிறது. இவரும் என்னைத் தன் இளையவளாக ஆக்கிக் கொண்டதன் மூலம் தனக்குத் தங்கையில்லாக் குறையைப் போக்கிக் கொண்டார். என்றே நான் கருதுகிறேன். யாழ். வேம்படியில் நான் உயர்கல்வி கற்று வரும் காலை, இவர்கள் இருவரும் எனக்குச் செய்த உதவிகள் என்னால் மறக்க முடியாதவை.

விடுமுறை நாட்களில் அண்ணா விடுதிக்கு வந்து என்னை அரியாலையில் அமைந்த தனது வீட்டிற்கு அழைத்துச் செல்வார். சைக்கிளை உருட்டியவாறே இருவரும் நடந்து செல்லும் போது பல அறிவுரைகளைக் கூறி வருவார். என்னைச் சிறந்ததோர் உயர் பதவியிற் காணவேண்டும் என்னும் தனது விருப்பத்தைப் பல தடவைகள் அழுத்திக் கூறுவார். அதன்பேறே இச்செயற்பாடுகள். வீட்டில் அக்கா சுவையுணவு தயாரித்துக் காத்து நிற்பார். இவ்வாறு அவர்களுடன் சனி, ஞாயிறு மகிழ்வோடு கழியும் மீண்டும் மிகவும் பொறுப்புடன் கொண்டு சென்று பாடசாலை விடுதியிற் சேர்ப்பார். இவரது பண்பாட்டு நடைமுறைகளால் ஈர்க்கப்பட்ட விடுதி நண்பிகளும் இவரைச் சூழ்ந்து 'பவானியின் அண்ணா' என்று அன்போடு உரையாடுவர். குருகுலம் அதிபர் - முகவர் மதிப்பிற்குரிய காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை ஐயா அவர்களின் புதல்விகள் இருவரும் கிளிநொச்சியில் இவரை அறிந்திருந்த காரணத்தால் இம் மாணவிகளுள் அடங்குவர்.

பின்னர் மாற்றலாகிக் கிளிநொச்சி சென்றபோதிலும் எமது அன்புத் தொடர்பு குறைந்து விடவில்லை. விடுமுறைக்குக் குடும்பமாகச் சென்று சில நாட்கள் தங்குவோம். அங்கே எமக்குக் கிடைக்கும் உணவு வகையும் அவற்றின் சுவையும் விபரித்துக் கூறமுடியாதவை. அண்மையிற் கூட எனது மூத்தமகள் திருமகள் என்னுடன் கிளிநொச்சி நினைவுகளை அசை போட்டவாறே பின்வருமாறு கூறினாள். "அம்மா, புனிதம் அத்தை நிறையச் சாப்பாடு சமைத்தப் போடுவா. மிகவும் சுவையாக இருக்கும். இப்போதும் அவற்றை நினைத்தால் ஆசையாக இருக்கிறது" என்று. உண்மைதான் எங்கள் அக்கா எத்தனை பேர் போனாலும் மனம் சலிக்காமல் காலை நீட்டியவாறு அமர்ந்து உணவுகள் தயாரித்துப் பரிமாறும் பாங்கு மிகவும் போற்றத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வந்தாரை வரவேற்கும் வன்னி மண்ணல்லவா இவரது வாழ்விடம்" இவை மட்டுமத, வாழை, பலா, மாங்கனிகள் சுவைப்பதோ ஏராளம்!. எமது இத்தகைய மகிழ்ச்சியில் அண்ணா, அக்கா பிள்ளைகள் இவர்களுடன் எங்கள் மாமாவும் இளைய மைத்துனரும் கலந்து கொள்வார்கள். அவர்களும் பலாப்பழம வெட்டி தருவார்கள்.

இனிமேல் இவ்வாறான வாய்ப்புக்கள் கிடைக்கமா? யார் செய்வார்கள்? அன்றைய கிளிசொச்சியும் இன்றில்லை. எம்மை வரவேற்க எங்கள் அக்காவும் அங்கில்லை.

"பிள்ளை பவி சாப்பிடுங்கோ" என்று ஆசையாய், அன்பாய் அரவணைத்து அடிசில் பரிமாறித் தனது கிள்ளைமொழிப் பேச்சில் எம்மை மகிழவைத்த எங்கள் அக்காவைக் காண்பது இனி எங்கே?

அழகுற ஆடையணிந்து அரசடியான் திருப்பாதம் தரிசிக்க ஆவலுடன் ஓடிவரும் அணங்கவள அல்வைமண் அனைத்த வரவேற்பதெப்போ?

அஞ்சா நெஞ்சமும், அறிவாற்றலும் துஞ்சுதலில்லாத் தொடர்பணியும் மிக்கவே விளங்கும் வீராங்கனையின் பாதச் சுவடுகளை, வீரத்தின் விளைநிலமாம் வன்னி மண் மீண்டும் தன்பால் பதிக்கும் பேற்றினைப் பெறுமா?

இவற்றிற்கான பதில் என்ன தருவார் யாருளர்?

நன்றியெனும் மூன்றெழுத்தை நன்றே நினைத்திருந்து
சென்றவிடம் தேடுகிறேன். சிந்தையில் - என்றும்
நிறைத்த நிகரிலா நேரிழையே நின்மாண்
மறையாது ஓங்கும் மலர்வு!
நின்மாண் - நின்புகழ்

**மைத்துனி**
**பவானி தர்மகுலசிங்கம்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல் பேத்தியின் பூப்புனித நீராட்டுவிழாவின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதவதி பெயருக்கு ஏற்ற புண்ணியவதி

புனிதம் - கள்ளம் இல்லா உள்ளமதில்
புனிதம் - அள்ளி வரும் அன்புதனில்
புனிதம் - கிள்ளி வரும் கிளிப்பேச்சில
புனிதம் - துள்ளி வரும் அனுசரிப்பில்
புனிதம் - இறை பதிகம் இசையுடன் பாடுவதில்
புனிதம் - மனிதநேயச் வாழ்வின் செயல்களில்
புனிதம் - இயற்கை எய்தியபோதும் புன்சிரிப்பு
புனிதவதி நாமம் என்றும் பூவுலகில் நிலவும்
புண்ணிய தலம் குருக்கட்டு பிள்ளையாரின்
பூமுகம் பார்த்து இசைகோர்த்து பாடினார் - இன்று
பூமலர்ப் பாதத்தில் கணவன் மகேசன் ஆசானோடு
பவுத்திரமாய் ஆத்மா கலந்து சாந்தி பெற்றுப்
பதிகங்கள் பாடுகின்றார் பாடிக்கொண்டே இருப்பார்
புனிதவதியின் ஆத்மா சாந்தி பெற நாமும் குருக்கட்டுப்
பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

## எங்கள் புனிதம் அக்காள்

கொஞ்சு தமிழில் மிஞ்சும் அன்பு - எம்
நெஞ்சமதை நெகிழ வைகக்கும் பண்பு
செந்தமிழ்ப் பெண்ணவள் செழிப்போடு வாழ்ந்தவள்
சிந்தை குளிர வண்ணத் தமிழில் செப்பிடுவாள்
பண்டு தமிழில் பகரும் பயன்கள்
தொண்டு புரிந்து பாடும் பதிகங்கள்
என்றும் எம் மனதில் எளிதில் பதிந்தவை
மன்றில் நின்றாலும் மலரும் புனிதக்கா நினைவு
நன்று அவள் ஆத்மா சாந்தி பெறும் - எம்மனதில்
நின்று உறவாடும் புனிதக்காவின் நினைவுகள்

**சுவிசில் இருந்து**
**வேலுப்பிள்ளை**
**செல்வயோகநாதன்**
**(மைத்துணன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் ஊடாக...

ஒரு சாதாரண மனிதருக்கு இவ்வளவு சிறப்புடன் இறுதிச் சடங்கு ஒன்று நிகழ்ந்திருப்பதை நேற்றுத்தான் பார்த்தேன். அன்பு உள்ளங்கள் ஆயிரம் பேருக்கு மேல் இந்நிகழ்வில் உருக்கமுடன் கலந்து கொண்டனர்.

எத்தனையோ இளம்பிள்ளைகள், குழந்தைகள் கொத்துக் கொத்தாக கொடூரமான முறையில் மரணிப்பதைப் பார்த்த பூமி கிளிநொச்சி. அந்த மண்ணில் 69 வயது மனுசி ஒருவர் இயற்கை எய்துவது என்பது ஒரு சாதாரண விடயமாகத்தான் இருக்கும் என எண்ணினேன். ஆனால் இத்தனை இழப்புக்களைக் கண்ட மக்கள், புனிதக்காவின் இழப்பை ஒரு ஆறாத் துயராக உணர்ந்ததைப் பார்த்து நான் அதிசயப்பட்டேன். மனம் நெகிழ்ந்தேன்.

சம்பிரதாயங்கள், உறவுமுறைகள் என்பவற்றைத் தாண்டி எல்லோரும் இதயபூர்வமாகச் தம் தம் கடமைகளைச் செய்த விதம், செயற்பட்ட வேகம், அத்துடன் வாத்தியங்கள், வெடிகள், தோரணங்கள், இரங்கல் உரைகள் என எல்லாம் சேர்ந்து புனிதக்காவின் பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு புத்துணர்ச்சியையும், தெம்பையும் கொடுத்தது மட்டுமல்லாமல் அதில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஒரு புதிய தெம்பைக் கொடுத்தது. மரணங்கள் மனிதரை துவண்டுவிடச் செய்கின்றன என்பது உண்மைதான். ஆனால் உரியமுறையில் இறுதிக் கிரிகைகள் செய்யப்படும் போது அவை புதுத் தெம்பையும், புத்துணர்ச்சியையும் கொடுக்கவும் வல்லன என்றதை உணர்ந்தேன். மத்தியானம் வெயில் உச்சியில்! நிலத்தில் வெறுங்காலை வைக்க முடியாத வெக்கை. இந் நேரத்தில் அன்னாரின் உடல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டது. தெருவில் இறங்கியதுதான் தாமதம், எப்படி வந்ததோ எங்கிருந்த வந்ததோ, ஒரு இலேசான மழைத் தூறல் வந்து வெய்யிலின் கொடூரத்தைத் தணித்து தெருவெங்கும் ஈரமிட்டுச் சென்றது. பூவின் மேல் நடப்பது போல் நடந்து சென்றோம்.

என் மனதை உருக்கிய இன்னொரு முக்கிய விடயம், புனிதக்காவின் அண்ணி 'ராசாக்கா' அவர்கள் உருக்கமாகப் பாடிய திருமுறைப் பாடல்கள். அவருக்குள் இப்படியொரு அபார சக்தி இருப்பதை நேற்றுத்தான் நான் கண்டு கொண்டேன்.

நேற்றைய தினம் பிரதோச விரதத்திற்குரிய நாளாகும். அந்நாளிற் புனிதக்காவின் இறுதிக் கிரிகைகள் நடைபெற்றிருப்பது இன்னொரு விசேஷம் ஆகும். அவருடைய ஆத்மா நேற்றே சாந்தி நிலை பெற்றிருக்கும் என்பது உறுதி.

**மைத்துணன்**

**ஞானதாஸ் காசிநாதர்,**

**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் ஊடாக...

"தகனை செல்லும் செல்லம்"
அண்ணன்மாருக்கு
அருமைச் சகோதரியாய்
எங்களுக்கும்
அன்புத் சகோதரியாய்
வாழ்ந்தவள்.
"புனிதம் இல்லாவிடில்
பொலிவே இருக்காது"
எனும் அளவில்
எங்கள் நிகழ்வுகளை
நிறைத்தவர்.
அவசர பயணத்துக்கு
ஏன் தான்
ஆயத்தம் ஆனாளோ!
விடை பெற்றுச் சென்ற போதும்
இருந்து பழகிய இடங்கள்
மீள் நினைவுகள்
அண்ணனை சுகம் விசாரித்தாள்
இன்று விடை பெற்று
சென்றாள் எங்கள் சகோதரி
சேர்ந்திருந்து உண்டு களித்தவள்
உறங்கி விட்டாள் இன்று....
இது தகுமா???

**அன்புத் தம்பி**
**முருகேசு கந்தவரோதயன்**
**சுவிஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா நீங்கள் மூன்றெழுத்து மந்திரம்

பூவினும் மெல்லிய இதயம்
தாயினைப் போலொரு பாசம்
சாவிலும் மறவேன்
உங்களின் நேசம்

உங்கள் உதரத்து
பிறந்திடவில்லையாயினும்
உங்கள் ஊனால்
உதிரம் வளர்த்தேன்..... என்
சதிரம் கட்டை
ஏறிடினும்
உமதன்பை மறந்திலேன்........

எங்கிருந்தோ வந்த என்னை
எட்டாம் பிள்ளையாய்
வளர்த்தீர்........
எட்டாத தூரம்
நீங்கள் சென்றிட்டாலும்
எல்லையில்லா
உமதரவணைப்பால்
உள்ளம் நெகிழுகின்றேன்.....

'அம்மா' எனும்
மூன்றெழுத்து மந்திரத்துக்குத்தான்
எத்தனை மகத்தான சக்தி.....

அன்பை உணவால்
எனக்களித்தீர்.......
பந்தி பரிமாறும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும்
வரச் சொல்லி சொல்ல முன்னரே
எனது பிரசன்னம்
நிகழ்ந்திருக்கும்....
நானுமொரு பிள்ளையாய்
இருந்த பொழுது
எத்தனை ஆனந்தமெனக்கு....
புதுச் சொந்தங்களை
எனக்களித்தீர்.......

'அம்மா'
பூவுலகுக்கு நீங்கள்
கையசைத்த போன பொழுது - என்
விழிகளில் கண்ணீரில்லை.....
செந்நீர்தான் சிந்தியது....

சின்னப் பிள்ளையாய்
நான் கலங்கி நின்ற பொழுது....
அத்தனை துயரமும்
விழி வழி
பெருக்கெடுத்தது.....

'அம்மா'
நீங்கள்
பூவினும் மெல்லிய இதயம்
தாயினைப் போலொரு பாசம்
சாவிலும் மறவேன்
உங்களின் நேசம்......

ஆ.வினோதன்
ஆசிரியர்.
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் வாழ்வில் உயர்வு கண்டவர்

17 ஆண்டுகளாக அமரர் மகேசன் புனிதவதி அவர்களுடைய குடும்பத்துடன் மிகவும் நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிடைத்தது. இவரது கணவருடனும், பிள்ளைகளுடனும் நான் நெருங்கிய தொடர்புகளோடு இருந்திருக்கின்றேன். இவரது பேரப்பிள்ளைகள் பலருக்கு கல்வி கற்பித்திருக்கின்றேன்.

இவர்களுடைய சுற்றத்தாரைப் பார்க்கும் பொது கலாச்சாரம், பண்பாடு இந்த இரண்டு வகையிலும் அவர்கள் வாழ்க்கையை திறம்பட நடத்தி வருவதை என்னால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதற்கெல்லாம் காரணம் எம்மைப் விட்டுப் பிரிந்த அமரர் புனிதவதி அம்மையார் தான்.

அமரர் தன் பிள்ளைகளையும் நல்வழிப்படுத்தி இயக்கிக் கொண்டிருந்தவர். பாடசாலை நிகழ்வுகளில் எலல்லா நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். அண்மையில் நடைபெற்ற ஊற்றுப்புலம் பாடசாலை விளையாட்டுப் போட்டியிலும் கலந்து, பரிசல்களை வழங்கி பிள்ளைகளை ஊக்கப்படுத்தியதுடன், பலர் மனங்களில் உறைந்தவராகவும் காணப்பட்டார். இதற்குக் காரணம் தன்னுடைய பிள்ளையின் பாடசாலை நிகழ்வு என்னும் அன்புரிமையோடு கலந்து கொண்டதை என்னால் காண முடிந்தது.

தனது பிள்ளைகள் மட்டுமன்றி, பேரப்பிள்ளைகள் பங்கு கொள்ளும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். நல்ல திருநீற்றுக் குறியுடன், நல்ல பொட்டுடன் சுமங்கலியாக வருகை தருவார்.

இவர் தனது 69வது வயதில் இயற்கை எய்தியிருக்கிறார். இன்னும் பல காலம் வாழ்ந்திருந்தால் பல பெண்களுக்கு உதாரணமாகவும், பல பெண்கள் இவரிடம் பல பாடங்களைக் கற்றிருக்கலாம்.

இவரது புதல்வர் உமாசங்கர் அவர்கள் எங்கள் அதிபர்களுடன் சேர்ந்து பழகுகின்ற விதம், பாடசாலையை நடத்துகின்ற ஒழுங்கமைப்பு போன்ற விடயங்களை நாம் சேர்ந்து கதைக்கும் இடங்களில் கதைப்பது வழக்கம். இவ்வாறான ஒரு பண்பட்ட குடும்பத்தை, சமுதாயத்தை எங்களுக்கு ஆக்கித் தந்து இன்று விடை பெற்றிருக்கும் அம்மையாரின் ஆத்மா சாந்தி பெற கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் அங்கம் சார்பாகவும், எனது குடும்பம் சார்பாகவும் வேண்டுகின்றேன்.

**திரு.சி.பாலகிருஷ்ணன்**
**அதிபர்**
**கிளி/பளை மத்திய கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகைக்கோர் புனிதம் அக்கா

செல்லமாக வளர்த்ததனால் செல்லக்கதை மாறாாவர். எப்போதும் குழந்தைத்தனம் கொண்ட வஞ்சகமில்லா சிரிப்புடன் கலந்த முகம். ஒரே சகோதரி என்பதனால் அவரது சகோதரர்களின் அளவில்லாப் பாசத்தில் மூழ்கி எழுபவர். தனது கணவர் வேலுப்பிள்ளை மகேசனின் வழிநடத்தலில் பிள்ளைகளை நன்கு நெறிப்படுத்தி நல்நிலைக்குக் கொண்டு வந்தவர்.

உறவுகளைப் பேணுவதில் சிறப்பான குணவியல்புகளைக் கொண்டவர். ஊரில் எவ்வாறு இருந்தாரோ, அதுபோலவே வெளிநாடு வந்தபோதும் மறக்காது எனை அழைத்து அளவளாவியதை இன்றும் மறக்கமுடியாது. அமரர் சுவிசில் தங்கியிருந்த வேளையில் அடிக்கடி கண்டு கதைக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் செல்ல மறந்தாலும் தொலைபேசிவழி ஞாபகப்படுத்தி என்னை அழைத்துக் கதைத்து மகிழ்ச்சியடைவார். அவர் உறவு வழியாக எனக்கு மிக நெருங்கியவர் என்பதற்காக மட்டுமல்ல நான் எப்போதும் நகைச்சுவையுடன் இயல்பாகப் பேசுவது அவருக்கு நன்கு பிடிக்கும்.

சமீபத்தில் நான் ஊர் வந்த போது உறவுகளுடன் சென்று வற்றாப்பளை அம்மனைத் தரிசித்து விட்டு வரும் வழியில் கிளிநொச்சியில் இந்தப் 'புனிதவதி' யையும் தரிசிக்கச் சென்றேன். அவர் இல்லத்திற்குச் சென்ற போது அவர் மிகுந்த சந்தோசங் கொண்டு என்னோடும் என்னோடு வந்த ஏனையவர்களுடனும் அகமகிழ்வோடு உறவு பாராட்டி, உபசரித்து மகிழ்ந்தார். பின்னர் ஒரு வாரத்தக்குள்ளேயே அதுவும் நான் பயணஞ் செய்ய நிர்ணயித்த அன்று அவரது சோகச் செய்தியை அறிவித்த போது மிகவும் அதிர்ச்சியுற்றேன். எனத பயணத்தை ரத்துச் செய்து அன்றையதினம் அவரது புதவுடலைச் தரிசித்தேன்.

அவர் தனது இறுதிநேரத்தை தெய்வசித்தம் உணர்ந்து கொண்டாரோ என்னவோ ஒரு வாரத்திற்கு முன்னர் எங்களோடு சிரித்து மகிழ்ந்த இந்தக் காட்சி இன்னமும் என் மனத்திரையில் அடிக்கடி ஓடிக் கொண்டிருக்கிறது. மறக்கமுடியாத ஒரு கள்ளங்கபடமற்ற குழந்தை முகம், எப்போதும் எம் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும்.

**பிரிவுத் துயரோடு**

**சு.புவனேஸ்வரன் (சுவிஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யார் எதிர் பார்த்தது மின்னாமலும் இடி முழங்கும்" என்று

புனிதக்கா! அவ எனக்கு மச்சாள். ஆனால் நான் மச்சாள் எண்டு கூப்பிட்டதில்லை. எங்கட குடும்பத்தில நான் மட்டுமில்ல. எல்லோரும் அப்பிடித்தான். இந்திராக்கா, ராசனக்கா, சின்ராசியக்கா எண்டு எங்கட மச்சான்மாரையும் அப்பிடித்தான் பெரியண்ணை. சின்னண்ணை, அருளண்ணை, தர்மநாதனண்ணை எண்டு அதே மாதிரித்தான் அவையளும் எங்கட மச்சான்மார், மச்சாள்மார் எல்லோரும்" கமலாக்கா, ஞானமக்கா, பவானியக்கா, ரதியக்கா, அனுஅக்கா எண்டு தான் கூப்பிடுவினம். தவமண்ணா, சைவமண்ணா, செல்வமண்ணா, யோகமண்ணா, ரவியண்ணா, குமாரண்ணா, பாரதியண்ணா எண்டு" ஞானதாஸ் எல்லோருக்கும் கடைசி எண்ட படியா எல்லோரும் தம்பி எண்டு கூப்பிடுவினம் அல்லது பேர் சொல்லித்தான் அழைப்பினம். இதனாலோ என்னவோ, சொந்த மச்சாள், மச்சான் எண்டு சொல்லி ஒண்டுக்கை ஒண்டாக கலியாணங்களும் நடக்கேல. (கருணாநிதி, தயாநிதி திருமணத்தைத் தவிர) குடும்பத்தில் எல்லோருக்கும் இளையவை எண்டபடியா கந்ததாசன் கந்தவரோதயன், ஞானி, தேனா எல்லாரையும் நாங்கள் பேர் சொல்லித்தான் கூப்பிடுவம். விதிவிலக்காக கந்தவரோயன், ஞானி, தேனா ஆக்கள் மட்டும் எங்களை (சிலவேளை) கூட்டுக்குடும்பமாக ஒரே இடத்தில் வளராததாலோ) அத்தான், மச்சாள் எண்டு முறை சொல்லிக் கூப்பிடுவினம்.

புனிதக்காவை நான் மச்சாள் எண்டதைக் கடந்து, எங்கட அக்கான்ர இடத்தில வைச்சு நேசிப்பதுதான் அதிகம். எங்கட அக்காவை உங்களில கனபேருக்கு தெரியாதெண்டு நினைக்கிறன். அவவின்ர பேர் சிவஞானவதி. அவ தன்ர 21வது வயதில 1966ம் ஆண்டு? மூளைக்காய்ச்சல் (அந்தநேரம் அது என்ன வருத்தம் எண்டு தெரியாது) வந்து கன நாளாக வைத்தியரிடமும், ஆஸ்பத்திரியளிலும் இருந்து இறந்துபோனவ! கமலாக்கா, இந்திராக்கா அவ இருந்தும் எனக்கு எங்கட அக்காவின் நினைவாக தோன்றுவது புனிதாக்காதான். ஏனெண்டா புனிதக்கா மட்டும்தான் எங்கட அக்கான்ர வயதை ஒத்தவ. புனிதக்கான்ர நிறம், முகத்தோற்றம் எல்லாம் ஓரளவுக்கு எங்கட அக்கா மாதிரித்தான்.!

அது மட்டுமில்ல அப்போ நாங்கள் படிக்கும்போது மூன்றாம் வகுப்பு (வகுப்புச் சரியாக நினைவில் இல்லை) தமிழ் புத்தகத்தில் "புனிதவதி" என்று ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது 69 ஆவது பிறந்த நாளில்.........
2013-01-03



தனது 69 ஆவது பிறந்த நாளில் பிள்ளைகளுடன்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடமும் இருந்தது. அப்போ அவ கிளிநொச்சியில இருந்த படியா எங்கட புனிதக்காவைப் பற்றித்தான். பாடப் புத்தகத்திலை எழுதியிருக்குதெண்டு நினைச்சதுமுண்டு. அதாலையும் அவவின்ர நினைவுகள் என்னில அதிகமாகப் பதிஞ்சு போச்சுதெண்டும் சொல்லலாம்.

சின்னனில பள்ளிக்கூட லீவுக்கு அவவைப் பாக்கிறதுக்கெண்டு அம்மாவோட கிளிநொச்சிக்குப் போறதுண்டு. அப்போ அவ செல்லமாக அழுகிறதை பார்த்து நாங்கள் சிரிச்சதுண்டு அவையின்ர. வீட்டில இருக்கிற பூமரங்களைத்தான் நாங்கள் அல்வாயில் கொண்டுவந்து நடுகிறது. எங்கட உப்புத்தண்ணிக்கு அதில பல பட்டுப்போக சில செவ்வரத்தையும் செவ்வந்தியும் மட்டும் உயிர்த்திருக்கும். பூத்திருக்கும். பேந்து அல்வாயில் மகேசண்ணையைக் கலியாணம் செய்தது. கிளிநொச்சிக்குப் போனது எல்லாமே அவவின்ர இறப்பைத் தொடர்ந்து மனதை வருடிக்கொண்டிருக்குது அன்றைய நினைவுகளாக"!

இன்றைய நினைவுகளாக" 2008ம் ஆண்டு சுவிசுக்கு வந்ததில இருந்து கனக்கச் சொல்லிக்கொண்டு போகலாம். இஞ்ச யசோ வீட்டுக்கு நாங்கள் காரில போறதெண்டா 20 நிமிசந்தான். புனிதக்கா வந்ததில இருந்து நாங்கள் குடும்பமா கிளி. பிள்ளைகள். மேகலா. ஹாசினி கிருபா எல்லாரும் அடிக்கடி யசோ வீட்டை போய் வருவம். பிள்ளைகளுக்கு பெரியம்மா எண்டு சொல்லி அவவை நல்லாப் பிடிச்சுப்போச்சு. வாணிகா. லக்ஷன் ஆக்களுக்கு எங்கட பிள்ளையளைப் பிடிச்சது மாதிரி. அவவுக்கும் எங்கட பொழுது போகும். பிள்ளைகளின் ஆசைக்காக 2.3 நாள் வீட்டையும் வந்து நிண்டவ புனிதக்கா!

புனிதக்கா சுவிசில றெயினில பிரயாணம் செய்ததெண்டா அது எங்களோட மட்டும்தான்! நாங்கள் ஒருமுறை புனிதக்காவை றெயினிலை இன்ரலாகன் கூட்டிக்கொண்ட போனனாங்கள். இன்ரலாகன் என்றது சுவிசில புகழ்மிக்க ரூறிஸ்ற் ப்ளேஸ். இந்தியாவில் உள்ள நடிகர் மாரெல்லாம் இங்கதான் ஓய்வெடுக்கவும். ஹனிமூனுக்கெண்டும் வாறவை. ஒரு அழகான மலைப் பிரதேசம். சமர் காலத்தில் அதன் அழகை வார்த்தையில் வர்ணிக்க முடியாது அவ்வளவு அழகு அங்கதான் நாங்கள் புனிதக்காவையும் கூட்டிக்கொண்டு போனனாங்கள். அந்தப் பீரியட்டிலதான் சுபாஸ்கரன்ர கதிரவேலு சித்தப்பாவும் மனைவியும் கூட வந்தவை. அங்க சுபாஸ்கரன் கிறில் பாட்டி போட்டு எல்லாரையும் சந்தோசப்படுத்த. புனிதக்காவும் நல்லா என்ஜோய் பண்ணினா! பேந்து. சுபாஸ்கரன் மகள் நந்தூரிக்கு நடத்தின சாமத்திய விழாவில எங்கட பிள்ளையள் பரதநாட்டியம் ஆடுறதுக்கு புதிசா பாவாடை சட்டை வேணுமெண்டிருக்க அதையும் புனிதக்கா தான் தைச்சுத்தாறன் எண்டு சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளிலையே அதையும் நல்ல வடிவா தைச்சுக் குடுத்தவ. பேந்து அவ போறதுக்கு கொஞ்சம் முன்னாடிதான் எனக்கு மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில இருக்கவேண்டியதாப் போச்சு. அப்ப என்னையும் ஆஸ்பத்திரியில வந்து பாத்துட்டுத்தான் புனிதக்கா ஊருக்கு போனவ.

அவ போய் இரண்டு வரியத்தாலை 2010ம் ஆண்டு எங்கள் இதயதேவதை கிளி (யோகா யோகாம்பிகை) இறந்த பிறகு, அவவின்ரை அஸ்தியை கரைக்கிறதுக்காக நான் பிள்ளையள் எல்லோருமாக ஊருக்குப் போனனாங்கள். அப்ப கொழும்பில் இருந்து ஊருக்குப் போற வழியில் கிளிநொச்சியில், புனிதக்காட்டை போக, அவ என்னையும் பிள்ளையளையும் கட்டியணைத்து ஆரத்தழுவி அழுத காட்சிகள் இன்னும் எங்கட இதயத்தை துளாவிக்கொண்டு தான் இருக்கு!

**கடைசியாக ...... அண்மை நினைவாக....**

புனிதக்காவின்ர பிள்ளைகள், பேரப்பிள்கைள் தவிர அவவிட்டை போய் ஓய்வெடுத்து உணவருந்தின உறவினன் எண்டா அது நான்தான். 2013 மார்ச் 3ந் திகதி மதியம் பருத்தித்துறையில இருந்து பஸ்சில வந்து கிளிநொச்சி மின்சார சபைக்கு முன்னால இறங்கி ரெலிபோனை அழுத்தின போது புனிதக்கா குரல் கொடுத்ததை அடுத்து கொஞ்ச நேரத்தில உதயன் என்னைக் கூட்டிச் செல்ல" அரவணைத்து, முத்தமிட்டு வரவேற்றவர் புனிதக்கா.

இந்தியாவில் சில மாதங்கள் நின்று இயற்கை உணவு முறைகளுக்கு பயிற்றப்பட்டிருந்த, எனது உணவு முறைகளைக் கேட்டறிந்து அதற்கு அமைவான முறையில் எனக்கான உணவை சிலநிமிட நேரத்திலேயே தயார் செய்திருந்தார். இயற்கை உணவு முறையில் ஒழுங்கு முறைப்படி முதலில் பழங்களையும், பச்சைக் காய்கறிகளையும் பின் அரை அவியல் உணவுகளையும் சாப்பிட்ட பின் முடிவாக ரசத்துடன் சாதம்! நான் கூறிய பாணியில் மதிய உணவைப் பரிமாறிய பின்" ரசம் வைப்பதாகக் கூறியிருந்தா. சாப்பிட்டு முடிந்ததும் வயிற்றில் ரசத்துக்கான இடம் இல்லாமல் போயிற்று, மாலைச் சாப்பாட்டுக்குப் பின் அருந்தும் வகையில் முடக்காத்தான் இலையும் போட்டு ரசம் செய்து தருவதாகச் சொல்லியிருந்தா.

மதிய உணவை அடுத்து பல விசங்கள் பற்றி உரையாடிய போது பேத்திமகள் வாணியின் சாமத்தியச் சடங்குடன் 2வது தடவையாக சுவிசுக்கு வர இருக்கும் அவவுடைய கனவு வார்த்தை வடிவில் தவழ்ந்து வந்து எனது செவிப்பறையை தழுவியதை இன்று வேதனையுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான முழு ஆரோக்கியத்துடன் புனிதக்கா நடமாடியதை நான் பார்த்தேன். உடற்கட்டு, உளத்திடம், சுறுசுறுப்பான உடல் அசைவு எல்லாமே அவவிடம் பொருந்தியிருந்தது.

நான் கேட்ட விதத்தில் மாலைச்சாப்பாடு இடியப்பத்துடன் தயாரானது! ரசமும் தயாரானது. சாப்பாட்டுக்குப் பின் ரசத்தைக் குடிக்கலாம் என்ற எண்ணத்தை முன் கூட்டியே அவவிடம் தெரிவித்தேன். அவ தயாரித்த ரசத்தை எப்படியாவது குடிக்கவேண்டும் என்று என்னளவில் நான் அவாப்பட்டிருந்தேன். மாலைச் சாப்பாடு முடிந்து ஒரு மணி நேரத்தில் கொழும்புக்குச் செல்லவேண்டும்! அதுவும் பஸ்சில்! பிரயாணத்திற்கு முன்பாக ரசம் குடிப்பதைப் பற்றி என்னை அறியாமலே எனது மனதில் ஒரு சஞ்சலம்" அப்போது ஏதோ யோசனையில் இருந்த புனிதக்கா தானாகவே வேண்டாம்" என்று நானும் கூறிக்கொண்டேன். ஓமக்கா அடுத்த முறை வரேக்கை ஒரு நாள் நிண்டாவது உங்கட கைப்பட்ட ரசத்தை கட்டாயம் குடிச்சிட்டுத்தான் போவேன்" என்று மிகுந்த நம்பிக்கையுடன்!

"யார் எதிர்பார்த்தது மின்னாமலும் இடி முழங்கும்" என்று!

அவரது ஆத்ம சாந்தியை வேண்டிப் பிரார்த்திக்கும்

**தம்பி சைவம்,**
**பிள்ளைகள்**
**மேகலா, ஹாசினி,**
**கிருஷா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவதி அம்மையாரின் தெய்வீகப் பணி....

அமரர் மகேசன் புனிதவதி அவர்கள் எமது ஆலயத்தோடும், ஆலய வளர்ச்சியோடும் மிக நீண்ட காலத் தொடர்பைக் கொண்டவர். தனது கடைசி மகனோடு நேரம் தவறாது பூசை நிகழ்வுகளில் பங்கு கொள்வார். ஆலய தரிசிப்பிற்கு எப்படிச் செல்ல வேண்டுமோ அப்படியே பூசைப் பொருட்கள், அழகிய பூமாலைகளோடு வருகை தருவார்.

"பூவும், பாவும் இறைவனுக்கு உவப்பானது" என்பதற்கு அமைய பூவாலும், இனிய பாக்களாலும் இறைவனை மகிழ்விப்பார். அம்மையாரது கூட்டுப் பிரார்த்தனை சைவசமய வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் புத்துயிர் கொடுப்பவை. சக்திக்குரிய தோத்திரப் பாடல்கள், மந்திரங்கள் என்பவற்றை முறையாக ஓதுவார். ஆலயங்களிலே நைமித்திய காலங்களில் பயபக்தியுடன் பஞ்சபுராணத்தினை ஓதுவார்.

இவர் இயல்பாகவே இறையுணர்வும், இறையன்பும், இறைபக்தியும் கொண்டிருப்பவர். இறைவனைப் போன்று பிறரையும் அன்போடும், கருணையோடும், பாசத்தோடும் நேசிப்பவர். குருலிங்க சங்கம வழிபாட்டின் மூலம் இறைவனைப் பிறரில் காண்பவர்.

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள் ஆண்டாள் போன்றும் தினமும் இறைவனின் திருநாமத்தைச் செப்பும் காரைக்கால் புனிதவதியாரைப் போன்றும் தன் இல்லற வாழ்வை இறைவாழ்க்கைக்காகவும் அர்ப்பணித்து வாழ்ந்த தெய்வப் பெண்ணாக இன்று நிரூபித்துச் சென்றிருக்கின்றார். அன்னாரது ஆத்மா சாந்தி பெறவும், உறவினர் ஆறுதல் அடையவும் துர்க்கை அம்மன் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலனசபை
துர்க்கையம்மன் தேவஸ்தானம்,
ஆனந்தபுரம் மேற்கு,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் இரங்கற் செய்தி

*"தற்காத்துத் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்"*

என்பதற்கிணங்க அமரத்துவம் அடைந்த அமரர் புனிதவதி மகேசன் அவர்கள் எமது வலயத்தின் முன்னாள் அதிபர் அமரர்.வேலுப்பிள்ளை மகேசன் அவர்களுடைய துணைவியாராவார். கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை அதிபர் திரு. மகேசன் உமாசங்கர், முன்பள்ளி ஆசிரியை திருமதி. இராதை சிவகுமார் ஆகியோரின் தாயாராகவும் திகழ்தவர். அன்னாரின் மருமகள் திருமதி. கீதாமணி உமாசங்கர் அவர்கள் எமது பணிமனையில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரிகின்றார். இந்த வகையில் கல்விப் புலம் சார்ந்த ஓர் அன்னையை நாம் இழந்து நிற்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்க்கும் ஆறுதல் கூறி நிற்கின்றேன். இவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வலயக் கல்விப் பணிப்பாளர்
க.முருகவேல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**It was with extreme shock and deep sorrow that I received the news of passing away of Mrs.Punithavathy Maheson beloved wife of my very close friend late Mr. Maheson and beloved mother of my favourite student Mr.Pathmashanger.**

I have been associating very close with this family from the inception of assuming duties as dean agriculture of the faculty of agriculture University of Jaffna located in Iranmadu junction Kilinochchi during early nineties.

Mrs.Maheson has been extremely helpful for her husband's yeoman service for developing education Hindu Culture in Kilinochchi. Besides this, she has been very much liked by the villagers and neigh bors purely due to her gentle, calm and dignified character and her willingness to come forward to help them when they are in need of assistance.

I have been a frequent visitor to shaker's house who was staying with his mother whenever I visit Kilinochchi and I have observed these qualities of her and wonderful hospitality shown towards us during our visit.

She will be missed not only by family members but also by those who are close and dear to her and who have experienced her great hospitality.

May her soul rest in peace at the feet of her creator.

*Pro.A.Navaratnarajah*
*Vice Chairman*
*Sewalanka Foundation.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு



தோற்றம் : 1944 . 01 . 03

மறைவு : 2013 . 03 . 21

உருத்திரபுரம் கிழக்கு, கிளிநொச்சியை பிறப்பிடமாகவும்
நாகதம்பிரான் ஒழுங்கை, ஆனந்தபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட

# திருமதி மகேசன் புனிதவதி

எங்கள் அயல் வீட்டு அன்னையே!
கணவனுக்கு நல்ல துணையாய்
பிள்ளைகளுக்கு சிறந்த தாயாய்
அயலவர்களுக்கு நல்ல பெண்மணியாய்
பக்திப் பரவசத்தோடு ஆலயங்களுக்குச் சென்று
தொண்டாற்றி, வழிபட்டு
இன்று உங்கள் பிள்ளைகளை
நல்ல நிலைக்கு கொண்டு வரச் செய்து
விட்டு திருப்தியோடு இவ்வுலகை
விட்டு சென்றுவிட்டீர்கள்
உங்கள் பிரிவால் உங்கள்
பிள்ளைகள் துடித்துப் போய்விட்டார்கள்
அவர்களின் துயரில்
நாமும் பங்கு கொண்டு
உங்களின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொ.நாகரத்தினம் குடும்பம்
பொய்கை குடும்பம்
இல.12, உருத்திரபுரம் கிழக்கு,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
1944 . 01 . 03



மறைவு :
2013 . 03 . 21

உருத்திரபுரம் மகேசன் முன்பள்ளி ஆசிரியையும், பிரதேச முன்பள்ளி இணைப்பாளருமான திருமதி சிவகுமார் ராதை அவர்களின் அன்புத் தாயரான

## அமரர் மகேசன் புனிதவதி

**நாகதம்பிரான் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.**

**வாழ்க்கைச் சோலை தனில்**
**மலர்ந்து நின்ற ஒரு மரம்**
**வாழ் விழந்ததம்மா**
**நேற்றிருந்த வாழ்வு**
**இன்று நிலையில்லை - நாம்**
**நினைத்துப் பார்க்கவில்லை**
**உம்மைப் பிரிவோம் என்று**
**பாசமிகு உம் செயல்கள்**
**பாதியில் மறையவில்லை**
**பசுமையான நினைவுகளாய் என்றும்**
**எம் இதயங்களில்....**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.**

பணிப்பாளர், மாவட்ட இணைப்பாளர்,
இணைப்பாளர்கள், ஆசிரியர்கள்,
சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்..!

தோற்றம் :
1944
.
01
.
03



மறைவு :
2013
.
03
.
21

கிளி/ இந்து ஆரம்பவித்தியாலயத்தின் முன்னை நாள் அதிபர் திரு.ம.உமாசங்கர். உருத்திரபுரப்பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி. சிவகுமார்

ராதை அவர்களின் அன்புத்தாயாரான

# அமரர் மகேசன் புனிதவதி

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்
கூடிக்களித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ
பிரிவால் வாடி நின்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கிறதே - நின் உறவின்
அடிதேடித் துடிக்கிறதே.....

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் நினைவுகளுடன் :**

நிர்வாகி, ஆசிரியர்கள்,
பெற்றோர்கள், மாணவர்கள்,
புதிய பொய்கை முன்பள்ளி,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்..!

தோற்றம் : 1944 . 01 . 03



மறைவு : 2013 . 03 . 21

## அமரர் திருமதி மகேசன் புனிதவதி

அல்வாய் வடக்கை பிறப்பிடமாக கொண்டு வாழ்ந்து வந்த அமரா வே. மகேசன் (அதிபர்) எமது கிராமத்தின் கட்டமைப்பை உருவாக்குவதிலும் செயற்படுவதிலும் மூத்த உறுப்பினராக செயற்பட்டு வந்துள்ளார்.

அமரர் வே. மகேசன் அவர்கள் எமது இளங்கோ சனசமூக நிலையத்தினை ஓர் உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதில் ஆசிரியர் என்ற வகையில் தனது ஆளுமைமிக்க வெளி தொடர்புகளை கொண்டு கிராம உயர்வை வெளிப்படுத்துவதில் பெரும் பங்காற்றினார்.

தலைவர். செயலாளர். பொருளாளர் என பதவிகள் வகித்து செயற்பட்டமை மனதில் நீங்கா நினைவாக இருந்து வருகின்றது. தீபாவளி விளையாட்டு போட்டி நிகழ்வு. முத்தமிழ் விழா இவற்றினை ஆண்டு தோறும் நடாத்துவதில் முன்னின்று பங்காற்றி வந்துள்ளார். இவ்வாறான இவரின் சமூக பணிகளுக்கு உறுதுணையாக அமரர் புனிதவதியார் இருந்து வந்துள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்திலும். உருத்திரபுரம் கிளிநொச்சியில் வாழ்ந்த காலத்திலும் இளங்கோ சனசமூக நிலைய நிகழ்வுகளில் பங்கு கொண்டு தமது பிள்ளைகளையும் ஈடுபடுத்தி நிலையத்துடன் உள்ள பற்றுணர்வை பேணி வந்துள்ளார்.

அவ் வகையில் சுவிஸ்நாட்டில் வசிக்கும் திருமதி யசோதை சந்திரகுமார் குடும்பம் சுவிஸ் கிளை உறுப்பினராக இணைந்து உதவி வருவதும் ஊர் பற்றின் வெளிப்பாடே ஆகும். மற்றும் மூத்த மகனான அதிபர் ம. உமாசங்கர் மற்றும் பிள்ளைகளுடன் இன்றும் ஊர் தொடர்பை பேணி தாய் தந்தையரின் வழியில் தங்கள் பிறப்பு கிராமத்தினை நிலை நிறுத்தி வருவதும் இளங்கோ சனசமூக நிலைய வளர்ச்சிக்கு வலுச்சேர்ப்பதற்காக உள்ளது.

அல்வாய் வடக்கு அரசடி விநாயர் ஆலய திருவிழாக்களில் தேவார. திருவாசக பாரயணம் பண்ணோடு இசைத்து வந்த அம்மையார் மகேசன் புனிதவதி இறையடி சேர்ந்துள்ளார். அவரின் ஆத்ம சாந்திக்காக அரசடி விநாயர் பெருமானை வேண்டி நிற்கின்றோம். ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இளங்கோ சனசமூக நிலையம்
இளங்கோ விளையாட்டுக்கழகம்
இளங்கோ மழலைகள் கல்விப் பூங்கா
இளங்கோ மகளிர் மன்றம்.

அல்வாய்
அல்வாய் வடக்கு
**24.03.2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
1944 . 01 . 03



மறைவு :
2013 . 03 . 21

## அமரர் மகேசன் புனிதவதி

வடமராட்சி அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல - 16 8ம் வாய்க்கால் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது இல - 392 ஆனந்தபுரம் கிளிநொச்சியை இருப்பிடமாகவும் கொண்ட புனிதவதி மகேசன் 21.03.2013 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பல கடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலை மாறிப்போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை நெஞ்சம் ஏற்பதில்லை.

விதியின் கணக்கை மாற்றிட எம்மால் முடியாதே அதனால் இவர் தம் பிரிவால் வாடும் குடும்பத்தினர் உறவினருக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

தலைவர். தி.இராசநாயகம்
முகாமைக்குழுவினர்
பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 1944 . 01 . 03

மறைவு : 2013 . 03 . 21

அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும் இல. 392 நாகதம்பிரான் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும்

அமரர்

## மகேசன் புனிதவதி

அன்பின் ஒளிவிளக்கே பண்பின் சிகரமே
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் பழகி
எல்லோரிடமும் அன்புமழை பொழிந்து
எந்நாளும் பழகிய நீர் சொல்லாமல் பேசாமல்
சென்றீரோ
நொந்து நெருட துடிக்கின்றோம் வேதனையுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சௌபாக்கியா சர்வதேச கம்பனி
பணியாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 - 01 - 1944 |  | 21 - 03 - 2013 |

(கிளிநொச்சியைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியை சிவகுமார் - ராதை அவர்களின் அன்புத்தாயார்)

**அமரர்**

## மகேசன் புனிதவதி

புன்னகை பூத்தமுகம்
புன்சிரிப்பு தவழும் இதழ்
இல்லத்தரசிக்கு ஏற்றகுணத்தழகு
வந்தாரை உபசரிக்கும் பண்பான தாயுமவள்,
எல்லா இதயத்திலும் குடியிருக்கும் தெய்வமவள்,
ஏங்குது எம் இதயம் எம் தாயே உனைப்பிரிந்து
ஆறாது எம் துயரம் மாதா எம்மைப் பிரிந்து
இறைவன் திருவடியில் எப்போதும் இருக்க
கண்ணீரை நாம் என்றும்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

முன்பள்ளி, கல்விச் சமூகம்,
வலயக்கல்விப் பணிமனை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி....!

தோற்றம்
03
.
01
.
1944



மறைவு
21
.
03
.
2013

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளரான திரு. சின்னப்பொடி தர்மநாதன் அவர்களின் அன்புச் சகோதரி

## அமரர் மகேசன் புனிதவதி

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சிரேஷ்ட பணியாளரான திரு. சின்னப்பொடி தர்மநாதன் (களஞ்சிய முகாமையாளர்) அவர்களின் ஏக சகோதரி. காலம் சென்ற அமரர் வேலுப்பிள்ளை மகேசன் J.P (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி யசோதை (சுவிஸ்), திரு. உமாசங்கர் (அதிபர் கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை), திருமதி. ராதை (முன்பள்ளி இணைப்பாளர், கிளிநொச்சி) திரு. பத்மசங்கர் (பொதுமுகாமையாளர், சௌபாக்கியா சர்வதேச கம்பனி), திருமதி.. வனிதை (தொழில் நுட்ப உத்தியோகத்தர், நகர சபை, திருகோணமலை) திரு. கௌரிசங்கர், உரிமையாளர் அருண் களஞ்சியம், ஆனந்தபுரம்) திரு. உதயசங்கர் (சௌபாக்கிய கம்பனி, கரைச்சிப் பிரதேச வெளிக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத்தாயார் காலமாகிய செய்து கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவு என்பது மட்டுமல்ல இப்பிரதேச மக்களின் மனங்களின் ஆறாத்துயரை ஏற்படுத்தியுள்ளது.

*இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது சகோதரர்கள் மற்றும் பிள்ளைகள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தலைவர், பணிப்பாளர்கள்,**
**அங்கத்தவர்கள், பொதுமுகாமையாளர்,**
**பணியாளர்கள்**
**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி..!

தோற்றம்
03
.
01
.
1944



மறைவு
21
.
03
.
2013

உருத்திரபுரம் மகேசன் முன்பள்ளி ஆசிரியரும், எமது சக ஆசிரியருமாகிய சிவகுமார் ராதை அவர்களின் அன்புத்தாயாரான

## அமரர் மகேசன் புனிதவதி

அன்பின், பண்பின், பாசத்தின்,
கடமையின் கண்ணியத்தின் கருணையின்
பிறப்பிடம் கடவுளின் நம்பிக்கையின் பிறப்பிடம்
இவ் அனைத்தையும் உங்களிடம் கண்டோம்.
அரிது அரிது மானிடப்பிறவி அரிது
அதுபோல் உங்களைப் போன்று
நல்லவரைக் காண்பது அரிது

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

***என்றும் நினைவுடன் :***
**ஆசிரியர்கள் பெற்றோர்கள்**
**மாணவர்கள்**
**மகேசன் முன்பள்ளி**
**D-8 உருத்திரபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
03
.
01
.
1944



உதிர்வு
21
.
03
.
2013

கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்
மகேசன் உமாசங்கர் அவர்களின் தாயார்

## அமரர் மகேசன் புனிதவதி

*புலர்ந்த பொழுதென்று புதிராகிப் போனதம்தம்மா*
*புரியாது துடிக்கின்றார், புலம்பி அழுகின்றார்*
*கண்ணான நின் பிள்ளைகளும் கதறி அழுகின்றார்.*

*பிறப்பொன்று இருப்பின் இறப்பொன்றும் உள்ளதென உளம்*
*தேற்ற உறவுகளோடும் நண்பர்களுடனும்*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்
கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சமர்ப்பணம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 01 - 1944 | 21 - 03 - 2013 |

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளரான

திருமதி. கிதாமணி உமாசங்கர் அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் மகேசன் புனிதவதி

இல.392, ஆனந்தபுரம், கிளிநொச்சி

மரணத்தை மரணிக்க வைக்க முடியாது
முடியுமென்றால் வேதனை தெரியும் மரணத்துக்கு,
சொந்த பந்தங்கள் இருந்திருந்தால்
வேதனை தெரிந்திருக்கும் மரணத்துக்கு,
என்றும் எம்மோடு இருப்பீர்
இல்லத்தில் ஜோதியாய் எரிந்திருப்பீர்
நீங்கள் தந்த பாசங்கள் நெஞ்சில்
எந்த நாளும் நிலை கொண்டு இருந்திடவே
உங்கள் தூயநினைவுகளை எங்கள் நெஞ்சத்தில் பதித்து வீட்டீர்....

பிரிவாற்றாது துயர்கொண்டிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் இணைந்து ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயரும் :
வலயக்கல்விப் பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும்,
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 03 . 01 . 1944



உதிர்வு 21 . 03 . 2013

## அமரர் மகேசன் புனிதவதி

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேசன் புனிதவதி அவர்களின் மறைவு எமது அல்வாய் வடக்கு விநாயகர் ஆலயத்தைப் பொறுத்தவரை பேரிழப்பாகும்.

இவர்கள் எமது ஆலய முதலாம் திருவிழா உபயகாரராக இருந்து ஆலயத்திற்கும் அளப்பெரும் சேவையாற்றினார்கள்.

சிறந்த பக்தையான இவர் சிறுவர், பெண்களைச் சேர்த்து பல ஆண்டுகளாக ஆலயத்திருவிழா காலங்களில் பஜனை செய்துவந்தார்கள். ஆலயத் திருவிழாக் காலங்களிலும் விஷேட பூசைகள் காலத்திலும் பஞ்ச புராணம் என்றால் முன்னின்று பாடுவார்.

எமது ஆலயத்திற்கான சோடசோமான்களை இவரும் கணவருமாக வாங்கித்தந்த ஆலயத்தைச் சிறப்பாக நடாத்த உதவியவர்கள்

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அல்வாய் வடக்கு மக்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அரசடி விநாயகரை வேண்டுகின்றோம்.

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**அல்வாய் வடக்கு விநாயகராலய பரிபாலன சபை**

**அல்வாய் வடக்கு விநாயகராலய இந்து இளைஞர் சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சமர்ப்பணம்

கண் திறப்பு 1944 - 03 - 01 | கண் திறப்பு 1944 - 03 - 01



வடமராட்சி அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும்.

இல : 392. ஆனந்தபுரம். கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி மகேசன் புனிதவதி

அன்பால் உறவணைத்து
பண்பால் பல சொல்லி வைத்து
கூட்டுறவே வாழ்வென்று
வகை கூறி வைத்த தாயே
இவ்வலகின் வாழ்வினி போதுமென்றோ
அவ்வுலகு செல்ல விரைந்தீர்
ஆறுதல் பல கூறி என்றும்
ஆற்றுவீர் என்று நாமிருக்க
தேறுதல் கூற ஊர் கூடி
எங்கேதான் சென்றீரோ?

பிரிவாற்றாது துயர்கொண்டிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் இணைந்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**பிரிவால் துயருறும்**

கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்,
ஆசிரியர்கள், பணியாளர்கள்,
மாணவர்கள், கரைச்சிக்கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி நீர் சொரிகின்றோம்..!

மண் மகிழ
03
-
01
-
1944



கண் நெகிழ
21
-
03
-
2013

கிளி/ இந்து ஆரம்பவித்தியாலயத்தின் முன்னை நாள் அதிபர்
திரு.ம.உமாசங்கர். அவர்களின் அன்புத்தாயார்

**மகேசன் புனிதவதி**

ஆறிடுமோ... ஆறிடுமோ...
எம் நெஞ்சம் அழுதாலும்
மாறிடுமோ எம்நெஞ்சம்
அன்பாலும் பண்பாலும் அனைவரையும் கவர்ந்தாரே
என்றும் நீங்கள் எம் நெஞ்சில்
அழியாது
வாழ்ந்திடுவீர்

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் நினைவுகளுடன்**

கிளி/ இந்து ஆரம்பவித்தியாலய
தரம் - 02 மாணவி
பா.சாச்சாயினி
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...!

## அமரர் மகேசன் புனிதவதி

வையகம் தன்னில் வாழ்வாங்கு வாழ்ந்து
வழிகாட்டிய எங்கள் அன்பு அம்மாவே!
உங்கள் அன்பு நினைவுகள்
எங்கள் நெஞ்சிலிருந்து
என்றென்றும் மாறாது மறையாது
பாசத்தை ஊட்டி பாதிவழியில்
கைவிட்டு மீளாத்துயில் கொண்டதேனோ?
எங்கள் அன்பு
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள்
நினைவுகள் அழிந்து போகாது.

**மண் மகிழ**
**03 - 01 - 1944**



**கண் நெகிழ**
**21 - 03 - 2013**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பெருகும் துயருடன்**
**கேதீஸ்வரன் குடும்பம், மனோகரன் குடும்பம்,**
**பாக்கியநாதன், தேவபாலன் குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள் ..!

எமது ஆலயத்தின் தலைவரான ம. உதயசங்கர் அவர்களின்
அன்புத்தாயாரான

## அமரர். மகேசன் புனிதவதி

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 03 - 01 - 1944 |  | 21 - 03 - 2013 |

உலகத்து வாழ்க்கைதனில்
உத்தமராய் வாழ்ந்தீர்கள்
அனைவருக்கும் மறக்கமுடியாத நல்ல
நினைவுகளைத் தந்தீர்கள் .............
உறவுகள் ஓலமிட
ஊரவர்கள் கண்ணீர் மழைபொழிய உங்கள்
உயிரை காலனவன் பறித்ததுதான் ஏனோ ....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய**
**பரிபாலன சபையினர்**
**D-8 உருத்திரபுரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் காணிக்கை

## அமரர் மகேசன் புனிதவதி

மண்ணில்
03 - 01 - 1944



விண்ணில்
21 - 03 - 2013

எங்கள் பள்ளி முதல் அதிபர்
மகேசன் பணி எங்கும் பரவி நிற்க
துணை நின்ற புனிதவதி அம்மையாரே
கல்விக் கண் திறக்க
உங்கள் எச்சத்தின் துணைகொண்டு
சிறுவர் நூலகம் தந்து எம்மை வாழ வைத்து
நீவிர் மட்டும் சென்றதேனோ – தாயே!
தொப்பில் கொடி உறவாக – எமை
நினைத்து வளர்த்து பாதி வழி விட்டுச் செல்லும்
மாயந்தான் என்னவோ....?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர்கள்,
கிளி புதுமுறிப்பு விக்னேஸ்வரா
வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் காணிக்கை

## அமரர் மகேசன் புனிதவதி

தோற்றம்
03 - 01 - 1944



மறைவு
21 - 03 - 2013

புலர்ந்தும் புலராத பொழுதில் வந்த செய்தி
"ஐயோ அம்மா போயிற்றாவே" – அதைப்
பொய்யுரையாகவே இன்றும் நினைக்கின்றோம்
எங்களூர் அம்மன் கோயில் பிரார்த்தனையில் உங்கள்
"பிள்ளையார் பிள்ளையார் பெருமை சேர்ந்த பிள்ளையார்" ஒலி
பிழையறக் காதோரம் இன்றும் கேட்கிறதே ....
மகேசன் துணைநின்ற புனிதவதி அம்மையே
காரைக்கால் புனிதவதியாய் இறைபதம் சேர்ந்தீரோ
உங்களது எச்சத்தால் எம்மூர் பெருமை கொள்ளும் நீவிர் சாந்தி
பெற
என்றும் மலர்கொண்டு அர்ச்சிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உருத்திரபுரம் கிழக்கு**
**ஊர்மக்கள்**
**பொது மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி....!

எமது பாடசாலை அதிபரின் அன்புத் தாயார்

## அமரர் மகேசன் புனிதவதி



| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 03 . 01 . 1944 | அன்பு கொண்ட உங்கள்<br>உயிர் எம்மை விட்டு போனதம்மா<br>ஆலமரம் சாய்ந்ததினால் விழுதுகள்<br>இங்கு வாடுதம்மா!<br>இனிய உங்கள் அன்புக்குரல்<br>நீதமும் காதில் ஒலிக்குதம்மா!<br>தனித்து எமை வாழவிட்டு இன்று நீ<br>போனதும் நியாயமா அம்மா!<br>உறவுகள் எத்தனை இருந்தென்ன<br>உலகிலே தேறுதலால் ஒருபோதும்<br>தேறிடாது அம்மா எம்மனம்<br>தேடினாலும் காண்போமா உங்கள்<br>இனியமுகம் . | 21 . 03 . 2013 |

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெருகும் துயரத்துடன்
பாடசாலைச் சமூகம்
கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை,
கிளிநொச்சி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள் இதய நன்றிகள்

எங்கள் அன்பு அன்னை அதிகாலை வேளை அவதியுற்று வைத்தியசாலை நாடிய போது விழிதனை இமை காப்பது போல் உடனிருந்து கவனித்த அனைத்து வைத்தியர்களுக்கும் . கால நியதியில் எங்கள் அன்னை இயற்கை எய்திய போது ஓடிவந்து உதவிகள் புரிந்த அயலவர்கள், நண்பர்கள், மற்றும் உறவினர்கள், இறுதிக் கிரியைகள் வரை கலந்து கொண்டு உதவிகள் புரிந்தவர்கள் உண்டி கொடுத்து உறுதுணையாய் நின்றோர், அனுதாபம் தெரிவித்தோர், ஆறுதல் அளித்தோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், பதாகைகள் பிரசித்தோர், தொலைபேசி, தொலைநகல், பத்திரிகை செய்திகள், கடிதங்கள், முகநூல் வாயிலாக இரங்கல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலித்தோர், மலர் வளையம் வைத்தோர் மலர்மாலை அணிவித்தோர், அஞ்சலி உரையாற்றியோர், கிரியையை நடாத்திய குரு, நினைவு மலருக்கு ஆக்கங்கள் தந்தவர்கள், இந்நூலை சிறப்பாக அச்சிட்டு உதவிய மல்ரிகலர் அச்சகம் கிளிநொச்சி நிறுவனத்தினர் அம்மலரினை ஆக்கிய எமது குடும்ப நண்பர் திரு.வ. ஜீவரெத்தினம் அதிபர் ( கிளி/ பளை றோ.க. பாடசாலை ) அவர்களுக்கும், இன்று எமது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்தோர்க்கும் எம் குடும்பம் சார்ந்த உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ.
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ.
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ.
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்.
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள்.
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

மல்றி கலர் பதிப்பகம், ... தொலைபேசி 0775562963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org